# அரசு ஊழியர்

**ஆகஸ்ட் 2021**

**மலர் : 42** **இதழ் : 8**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**
**அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு**
**ஆசிரியர் : ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு**
**மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி**
**முகவரி : பழைய எண். 48**
**புதிய எண் 46, தேரடித் தெரு**
**திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.**
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### காத்துக் கிடக்கிறது கோபம்

*உங்களைப் போலவே*
*கண்ணால் பார்க்கிறோம்;*
*செவியால் கேட்கிறோம்;*
*கால்களால் நடக்கிறோம்;*
*கைகளால் செய்கிறோம்!*
*உங்களில் யாராவது*
*மலத்துளையால் உண்டு*
*வாயால் கழிக்கிறீர்களா?*
*உங்களுக்குக் கொம்புண்டோ?*

*உமக்குத் தெரிந்த வேறுபாடு*
*உம் துப்பாக்கிக்குத் தெரியாது*
*அது நாங்கள் சுட்டாலும் வெடிக்கும்!*
*அப்போது பலியாகப் போவது யார்*
*என்று தீர்மானிக்கும் உரிமையை*
*இப்போதே உங்களுக்குத் தருகிறோம்!*

**- கு.பால்ராஜ்**




# காகிதப் புலிகளும், பெகாசஸ் பொய்களும்!

*கடந்த சில நாட்களாக தமிழக அரசு, அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 60லிருந்து 58 ஆகக் குறைக்கப்போகிறது என்று வந்து கொண்டிருக்கும் வதந்திகள் அரசு ஊழியர்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. தற்போது அரசுக் கருவூலத்தில் நிதிநிலை கவலையளிக்கக்கூடியதாக உள்ள நிலையில் 58 வயது நிறைந்தவர்களுக்கு ஓய்வு வழங்க அரசு முடிவெடுத்தால் சுமார் 60000க்கும் மேற்பட்டவர்கள் ஓய்வில் செல்ல நேரிடும். ஒரு வருடத்திற்கு சுமார் 20000 பேராவது ஓய்வு பெறுவார்கள் என கணக்கிட்டால் மூன்று வருடங்களாக ஓய்வு பெற வேண்டியவர்கள் ஒரே நேரத்தில் ஓய்வு பெற நேர்ந்தால் அனைவருக்கும் ஓய்வூதியப் பலன்களை உடனடியாக தமிழக அரசால் தர முடியாது என்ற யதார்த்த நிலையினை ஒவ்வொரு அரசு ஊழியரும் உணர்ந்துள்ளனர். அதனால் அரசு இப்படி ஒரு திடீர் முடிவெடுத்தால் என்ன ஆகுமோ என்ற பயமும் கவலையும் ஓய்வுபெறும் நிலையில் உள்ள அரசு ஊழியர் ஒவ்வொருவரையும் தொற்றியுள்ளது. தற்போதுள்ள அரசின் நிதிவருவாயைக் கொண்டு கண்டிப்பாக ஓய்வூதியப் பலன்களை பணமாக கொடுக்க முடியாது என்ற நிலையில் இரண்டு ஆண்டுகள் கழித்து பணமாக மாற்றிக்கொள்ளும் வகையிலான பத்திரங்களைக் கொடுத்து 58 வயது முடிந்த அனைத்து அரசு ஊழியர்களையும் ஓய்வில் அனுப்பலாம் என்பதான அரசின் திட்டம் பற்றிய வதந்திகள் 58 வயது முடிந்த, முடிக்கவிருக்கும் அரசு ஊழியர்களின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.*

*ஓய்வுபெறும் வயது 58ஐ 59ஆக எடப்பாடி அரசு நீட்டித்த போதும் சரி, பிறகு அதை 60 ஆக உயர்த்திய போதும் சரி பெரும்பாலான அரசு ஊழியர்கள் அதை விரும்பவில்லை. நமது இயக்கமும் கூட இதனால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கான வாசல்கள் அடைக்கப்படும் நிலை உருவாகும் என்றும், அது சமூகத்தில் இளைஞர்களை திசைமாறி சென்றுவிட வழிவகுக்கும் என்றும் அப்போதைய தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தோம். எதிர்ப்பு*

இயக்கங்களையும் நடத்தினோம். ஆனால் எடப்பாடி தலைமையிலான அதிமுக அரசு அதை கருத்தில் கொள்ளவில்லை. அரசின் நிதி இருப்பு அன்றைய முதல்வரை அத்தகையை நிலையை மேற்கொள்ள வைத்தது என்ற நிதர்சனத்தையும் அதற்குக் காரணம் அதிமுக அரசின் பொறுப்பற்ற ஆட்சிதான் என்பதையம் நாம் மறுக்கவில்லை. ஆனால் இப்போது பதவியேற்றுள்ள திமுக அரசு 58வயது முடிந்தவர்களை ஓய்வுபெற வைக்கும் திட்டத்தில் இறங்கியுள்ளதற்கான அதிகாரப் பூர்வமான அறிவிப்புகள் எதுவும் இல்லாத நிலையில் அது குறித்து நாம் ஐயம் கொள்ளவேண்டிய அவசியமில்லை என்றே தோன்றுகிறது.

இதுமாதிரியான வதந்திகளை கசியவிடுவது அரசின் ராஜதந்திரங்களில் ஒன்றாக சிலர் பார்க்கிறார்கள். இதன்மூலம் அரசு ஊழியர்கள் தரப்பில் எந்தவிதமான எதிர்வினை வருகிறது என்று நாடி பிடித்துப் பார்க்கும் வேலையினை அரசு செய்கிறதா என்ற சந்தேகம் நம்மில் சிலருக்கு உண்டு. அரசு ஊழியர்கள் மற்றும் பலகட்சித் தலைவர்கள் இத்தகைய மாற்று ஏற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றாலும் அவர்களில் சிலர் 58 வயது முடிந்தவர்கள் பணி ஓய்வு பெறுவதன் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதை ஆமோதித்துள்ளனர். அரசுத்துறைகளில் ஏற்கெனவே கடந்த பல ஆண்டுகளாக 4.50,000 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ள நிலையில் 58 வயது முடிந்தவர்கள் ஓய்வு பெறுவதன் மூலம் ஏற்படும் சுமார் 60000 காலி இடங்களில் இளைஞர்களுக்கு பணிவழங்கும் நோக்கில் 58 வயது முடிந்தவர்களை வீட்டுக்கு அனுப்ப அரசு முடிவெடுத்துள்ளதாக கூறப்படுவது சப்பைக்கட்டு சமாளிப்பாகவே தெரிகிறது. ஆகவே அந்த வகையிலும் அரசு முடிவெடுக்கக்கூடும் என்ற கருத்து ஏற்புடையதாக தெரியவில்லை.

தமிழக அரசின் பொருளாதார நிலையை உயர்த்த ஐந்து பொருளாதார வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது. அது அரசுக்கு வகுத்துத் தந்த ஏற்பாடுதான் இந்த 58 வயது ஓய்வும், ஓய்வூதியப் பலன்களை பத்திரங்களாக கொடுக்கும் ஏற்பாடும் என்பது நமக்கு வரக்கூடிய செய்தியாக உள்ளது. இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நாம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பது இதைத்தான் ''காகிதப் புலிகளால் கானகத்தை ஆள முடியாது.'' தேர்தலுக்கு முன் அரசு ஊழியர்களின் கோரிகைகள் மூலம் தமிழக முதல்வருக்கும் அரசு ஊழியர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை இந்தப் பொருளாதாரப் புலிகளுக்குப் புரியாது. இப்போது முதல்வர் அமர்ந்திருக்கும் அரியணையில் அவர் அங்கே அமர வேண்டும் என்று பாடுபட்டவர்களில் பெரும்பான்மையினர் அரசு ஊழியர்கள். முதல்வருக்கும் அரசு ஊழியர்களுக்கும் ஏற்பட்டுள்ள இந்த பந்தம் ஆத்மார்த்தமானது. அரசு ஊழியர்களுக்கு முதல்வர் கொடுத்துள்ள வாக்குறுதிகள் வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல. அது ஒப்பந்த பத்திரங்களைத் தாண்டிய உணர்வு பூர்வமான பந்தம். முதல்வர் எந்த முடிவையும் அரசு ஊழியர்களின் நலன்களை புறந்தள்ளி எடுக்கமாட்டார் என்ற திடமான நம்பிக்கையில் தான் அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் பழைய ஓய்வூதியம் திரும்ப அறிவிக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். இந்த அரசாங்கம் பதவியேற்ற காலகட்டம் மற்றும் கடுமையான சூழலில் நாம் நம் கோரிக்கைகளை உடனே நிறைவேற்றச் சொல்லி நிர்ப்பந்தப் படுத்த வேண்டாம் என்றே களயதார்த்தத்தை கருத்தில் கொண்டு காத்திருக்கிறோம். நம்முடைய உணர்வுகள் மதிக்கப்படும் உரிமைகள் காக்கப்படும் என்ற நம்பிக்கையை அரசு ஊழியர்கள் நிதர்சனமாக நிச்சயமாக கொண்டுள்ளோம். ஆகவே அரசு ஊழியர்களே வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம். தமிழக முதல்வர் அரசு ஊழியர்களின் நம்பிக்கைக்கு உரியவராக இருப்பார் என்றும், நமக்கான உரிமைகளை அவர் நிச்சயம் நிறைவேற்றுவார் என்பதிலும் நாம் ஒவ்வாருவரும் நிச்சயமாக நம்பிக்கையுடன் இருப்போம். நம்முடைய உரிமைகளும் சலுகைகளும் இந்தக் காகிதப் புலிகளின் கணக்குகளால் ஒருபோதும் பலவீனப்பட்டுவிடாது.

ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமைகளை பறிப்பதில் எந்த சமரசத்துக்கும் இடம் கொடாமல் செயல்படுகிறது என்பதற்கு சமீபத்திய உதாரணம், ஒன்றிய அரசு 2021ஆம் ஆண்டு மருத்துவ மாணவர் சேர்க்கைத் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் ''அகில இந்திய தொகுப்பு இடங்களுடன் மாநில அரசின் இடங்களுக்கும்

ஒன்றிய அரசே மாணவர் சேர்க்கையை நடத்தும்'' என தெரிவித்துள்ளதாகும்.

பன்னாட்டு நிதி நிறுவனம், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 12.5 சதவீதத்திலிருந்து 9.5. சதவீதமாக குறைத்துள்ளது. இதற்குக் காரணம் நுகர்வோர் நம்பிக்கை மீட்சி மிக மெதுவாக இருப்பதாகவும் மற்றும் தடுப்பூசி செலுத்துவது குறைவாகவும் சீரற்று இருப்பதாகவும் பன்னாட்டு நிதி நிறுவனம் கூறுகிறது.

இந்தியாவில் எவ்வளவு தடுப்பூசிகள் தயாரிக்கப்படுகின்றன என்பது மோடி அரசாங்கத்துக்குத் தெரியுமா? இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் மூன்று கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு முரண்பட்ட பதில்களைத் தந்துள்ளது மோடி அரசு. முதல் கேள்வியில் "கோவாக்சின்" தயாரிக்கும் பாரத் பயோ டெக் நிறுவனம் மாதம் ஒன்றுக்கு ஒரு கோடி டோஸ் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது. அடுத்த கேள்வியிலேயே அதே அமைச்சகம் பாரத் பயோடெக் நிறுவனம் மாதம் ஒன்றுக்கு 2.5 கோடி டோஸ் தயாரிக்கிறது எனவும் சீரம் நிறுவனம் மாதம் ஒன்றுக்கு 11 கோடி டோஸ் கோவிஷீல்ட் தயாரிக்கிறது எனவும் மூன்றாவது கேள்வியில் பாரத் பயோடெக் 1.75 கோடி டோஸ்கள் தயாரிப்பதாகவும், சீரம் நிறுவனம் 13 கோடி டோஸ்கள் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளன. கோவிட் முதல் அலையை தவறாகக் கையாண்டதால் இரண்டாவது அலையின் பேரழிவு நம்மை தாக்கியது. தடுப்பூசி திட்டத்தை தவறாகக் கையாள்வதால் மூன்றாவது அலைக்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது. மக்களின் உயிர்கள் குறித்து சிறிதும் கவலைப்படாத பொறுப்பற்ற அரசாங்கமாக மோடி அரசு உள்ளது. 25 சதவீத தடுப்பூசிகள் தனியாருக்கு மோடி அரசு ஒதுக்கியது. தனியார் மருத்துவமனைகள் ஏராளமான தடுப்பூசிகளை கைவசம் வைத்துள்ளன. தனியார் தம் பங்கைச் செலுத்தவில்லை எனக்கூறுகிறார் ஒன்றிய அமைச்சர் பியூஸ்கோயல். மோடியின் தடுப்பூசி கொள்கை தோல்வி என்பதுதான் இதன் பொருள். நமது ஏழை அண்டை நாடுகள் உட்பட பெரும்பாலான தேசங்கள் தடுப்பூசிகளை இலவசமாகவே செலுத்துகின்றன. அமெரிக்காவில் கூட அரசாங்கம் தனியாருக்கு தடுப்பூசிகளை விலைக்குகொடுக்கிறது. ஆனால் குடிமக்களுக்கு இலவசமாக தடுப்பூசிகள் போடுகிறது. ஆனால் இந்தியாவில் மோடி அரசு தனியாருக்கு 25 சதவீத தடுப்பூசிகளை ஒதுக்கீடு செய்திருப்பதன் மூலம் தனது அரசுக்கும் கட்சிக்கும் நிதிவரவுகளை ஏற்படுத்திக்கொள்ள மோடி அரசு திட்டமிட்டு வக்கற்ற வறியவர்கள் முதுகுத்தோலை சுரண்ட ஆரம்பித்துவிட்டது. எல்லாவற்றையும் வணிகமாக பார்க்காமல் மக்கள் நலனை கொஞ்சமாவது நினைவில் வைத்து ஒன்றிய ஆட்சியாளர்கள் தடுப்பூசி திட்டத்தை விரைவுபடுத்தாவிட்டால் ஏற்கெனவே நாம் பார்த்த இரண்டு அலைகளையும் விட மூன்றாம் அலையின் தாக்கம் நம் கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த ஒருவாரமாக நடைபெற்று வரும் நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடரின் முதல்வார நிகழ்வுகள், மோடி அரசாங்கத்தின் குணத்தைப்பற்றி, ஏராளமான அம்சங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது. நாடாளுமன்றம் துவங்கிய ஒருசில நாட்களிலேயே, அரசாங்கம் உண்மைக்குப் புறம்பான இரு அம்சங்களைப் பதிவு செய்தது. முதலாவது, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அமைச்சர், இந்தியாவில் பெகாசஸ் உளவு மென்பொருள் பயன்படுத்துவது குறித்து ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளை மறுத்ததுடன், "அதிகாரப்பூர்வமற்ற ஊடுருவும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை" என்றும் தெளிவற்ற விதத்தில்அறிக்கை தாக்கல் செய்தார். இரண்டாவதாக, மாநிலங்களவையில் ஒரு கேள்விக்கு, சுகாதார இணை அமைச்சர் அளித்த அதிர்ச்சியூட்டும் பதிலாகும். அவர், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் கூறியுள்ளபடி ஆக்சிஜன் பற்றாக்குறையினால் மரணங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று அறிவித்தார்.

இந்த இரு அறிக்கைகளும் எந்த அளவிற்குப்பொய்யானவை என்பதும் அதிர்ச்சியளிக்கக்கூடியவை என்பதும் அனைவருக்கும் நன்கு தெரியும். இவையிரண்டும் எதேச்சதிகார மோடி அரசாங்கம் நாடாளுமன்றத்தையும் நாட்டு மக்களையும் அவமதித்திடும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறது என்பதை இவை வெளிப்படுத்துகின்றன. உண்மைகளை

மறுப்பதும், அவற்றுக்கு எதிராகப் பொய்களை அவிழ்த்துவிடுவதும் இந்த அரசாங்கத்திற்கு வழக்கமான நிலைப்பாடாகப் போய்விட்டது. ஆகையால், நாடே கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராகப்போடப்பட வேண்டிய தடுப்பூசி பற்றாக்குறையால் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, இந்தஅரசாங்கமோ பற்றாக்குறை ஏதுமில்லை என்று மறுப்பதுடன், இவ்வாறு முறையிடும் மாநில அரசாங்கங்கள்தான் இதனை அரசியலாக்கிக்கொண்டிருக்கின்றன என்றும் தங்கள் மாநில மக்களுக்குத் தடுப்பூசி செலுத்தமுடியாத திறமையின்மையை இவ்வாறு மாற்றிக் கூறிக்கொண்டிருக்கிறது என்றும் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

மோடி அரசாங்கம் நாடாளுமன்றத்தில், கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் தடுப்பூசி உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த தடுப்பூசிகள் குறித்தும், தடுப்பூசி செலுத்துவதற்காகத் தேவைப்படும் தடுப்பூசித் தவணைகள் (Doses) எண்ணிக்கை குறித்தும், மூன்று வெவ்வேறான கணக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறது. ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால், தடுப்பூசி உற்பத்தி அதிகரிக்கப்படவேயில்லை. அரசாங்கம் தான் பயன்படுத்தப்படுவதற்காக கைவசம் இருந்துவரும் தடுப்பூசிகளின் எண்ணிக்கையை தொடர்ந்து மிகைப்படுத்திக் கூறிக்கொண்டே இருக்கிறது. மேலும் மோடி அரசாங்கமானது, கோவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்புக்குள்ளாகி இறந்தவர்கள் எண்ணிக்கையைக் குறைத்து அரசாங்கம் அறிக்கை எதுவும் வெளியிடவில்லை என்றும் தொடர்ந்து மறுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ஆய்வுகள் கூறுவது என்னவென்றால், அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ள எண்ணிக்கையைவிட குறைந்தபட்சம் பத்து மடங்காவது இறப்புகள் இருக்கும் என்று காட்டுகின்றன.

இப்போது பெகாசஸ் ஊழல் சம்பந்தமாக பிரெஞ்சு அரசாங்கத்தால் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இஸ்ரேல் அரசாங்கம்கூட இஸ்ரேல் நிறுவனமான என்எஸ்ஓ உற்பத்தி செய்திடும் உளவு மென்பொருளை விற்பது தொடர்பாகவும் பயன்படுத்துவது தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைமுறைகளை மறுஆய்வு செய்யப்போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால், இஸ்ரேலிலிருந்து எவ்விதமான உளவு மென்பொருளையும் வாங்குவதற்கு அரசின் அமைப்புகள் எதுவும் ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை என்றும், எனவே இந்தியாவில் அதுபோன்று எந்தவொரு விசாரணையும் நடத்த முடியாது என்றும் மோடி அரசாங்கம் பிடிவாதமாக மறுத்து வருகிறது. மோடி அரசாங்கத்தைப் பொறுத்தவரை, உண்மை என்பது தங்களின் தேவைக்கேற்றவாறு வளைந்துகொடுக்கும் ஒரு பண்டமாகும். இந்த அரசாங்கத்திடம் நிலைத்திருப்பவை என்பன இந்துத்துவாவும் நவீனதாராளமய நிகழ்ச்சி நிரலுமேயாகும். மக்கள்தொகைக் கட்டுப்பாடு, பசுவதைத் தடை, 'புனித ஜிகாத்' சட்டங்கள்-என அனைத்துமே பாஜக ஆளும் மாநில அரசாங்கங்களால் எவ்வித இடைவெளியும் இல்லாமல் பின்பற்றப்படுகின்றன.

ஒன்றிய அரசைப் பொறுத்தவரை, அது பெரிய கார்ப்பரேட்டுகளையும், பெரும் பணக்கார பில்லியனர்களையும் மேலும் மேலும் வளமாக்குவதற்கான வேலைகள் அனைத்தையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதற்காக அது, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரைவார்த்திடும் நாசகரமான கொள்கையைப் பின்பற்றுகிறது. பெரும் கார்ப்பரேட்டுகள் பொதுத்துறை வங்கிகளில் வாங்கியுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்கிறது, பொது சுகாதார அவசர நிலைமையைச் சமாளித்திட பணம் அத்தியாவசியமாகத் தேவையுள்ள போதிலும்கூட, கொரோனா வைரஸ் பெருந்தொற்றாலும், பொருளாதார மந்தத்தாலும் சாமானிய மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு பணத்தேவை அதிகமான அளவில் தேவைப்படும் நிலையிலும்கூட கார்ப்பரேட்டுகள் மீதும் பெரும் பணக்காரர்கள் மீதும் வரி விதிக்க மறுக்கிறது மோடி அரசு. கொரோனா வைரஸ் தொற்று அனைவரையும் பாதித்துள்ள போதிலும், நாட்டு மக்கள் அதன் கோரத்தன்மையை முழுமையாக உணர்ந்துள்ள போதிலும், இதன் பாதிப்புகளிலிருந்து மக்களை எப்படிக் காப்பாற்றுவது என்று கொஞ்சம்கூட கவலைப்படாத அரசாங்கமாக இந்த அரசாங்கம் இருந்துவருகிறது. இந்த நிலை இப்படியே தொடருமானால் கால் வயிறு கஞ்சியாவது குடித்து வந்த ஏழைகள் கூட இனி காலியாகி விடுவார்கள். ■

# மாநில செயற்குழு முடிவும் நமது ஸ்தாபன கடமையும்

ஒரு தொழிற்சங்கம் 38 ஆண்டுகளாக உயிரோட்டத்துடன் செயல்படுவது என்பது ஒரு சாதனையே. அதிலும் பல்வேறு அமைப்புகள் இருந்தாலும் கடந்த காலங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட தொழிற்சங்கம் என்பது வியப்புக்குரிய சாதனையாகும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவங்கப்பட்டு (6.5.84 மதுரையில் துவங்கப் பட்டது) வயது 38 ஆண்டுகள் கடந்த நிலையில் 2021ஆம் ஆண்டு துவக்கத்தில் நாம் நடத்திய போராட்டம் தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.

கடந்த 38 ஆண்டு காலத்தில் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக அரசு ஊழியர், ஆசிரியர்களை இணைத்து ஊதிய உயர்வுக்காக மட்டுமல்லாது தேசத்தின் அனைத்து உழைப்பாளி மக்களின் நலன்களையும் பாதுகாத்திட ஏராளமான இயக்கங்களில் அனைத்து உழைப்பாளி மக்களுடன் இணைந்து போராடி வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 40 ஆண்டுகளாக இந்தியாவில் அமுல்படுத்தப்பட்டு வரும் நவீன உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கலினால் உலகத் தொழிலாளர்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை எதிர்கொள்ள (தற்போது உள்ள ஒன்றிய அரசின் ஊழியர் விரோத, மக்கள் விரோத கொள்கை களுக்கு எதிராக) வலுவான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டிய பின்னணியில் நமது மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.


தர்மபுரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவ பேரவையில் எடுக்கப்பட்ட நான்கு கட்ட போராட்டங்கள், அதைத் தொடர்ந்து கோட்டை முற்றுகை போராட்டம், அதன் தொடர்ச்சியாக கொரோனா காலத்தில் நமது தோழர்கள் எதிர்கொண்ட விதம், மக்களுக்கு சேவை ஆற்றிய பணிகள், கடந்த அதிமுக அரசு 10 ஆண்டுகள் அரசு ஊழியர்கள் மீதும், மக்கள் மீதும் தொடுக்கப்பட்ட கடுமையான அடக்குமுறைகளை எதிர்கொண்டு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் புதிதாக தமிழகத்தில் திமுக தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற அரசாங்கத்திற்கு நமது சங்கத்தின் சார்பில் தேர்தலுக்கான பணிகள் குறித்தும் விரிவாக மாநில செயற்குழுவில் விவாதிக்கப்பட்டு நமது சங்கத்தின் எதிர்கால நோக்கில் திட்டமிட்டு செயலாற்ற கீழ்கண்டவாறு முடிவாற்றப்பட்டது.

## உறுப்பினர் சந்தா

நமது சங்கத்தின் முக்கிய பணிகளில் ஒன்று உறுப்பினர் சந்தா சேர்ப்பு. கடந்த காலங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை சேர்த்து நமது அமைப்பு தற்போது கொரோனா தொற்று காரணமாக சற்று தொய்வு ஏற்பட்டுள்ளது. அதை போக்கின்ற வகையில் தமிழ்நாட்டில் எந்த ஒரு அமைப்பும் செய்யாத போராட்டத்தை அதாவது கோட்டை முற்றுகைப் போராட்டத்தை நடத்தி தமிழ்நாட்டில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான் ஊழியர்களின் நலனுக்காக எத்தகைய போராட்டத்தையும் நடத்த வல்லமை படைத்த அமைப்பு நாம் தான் அது மட்டுமல்ல, நம்மை பகைத்தவர்களை ஆட்சி பீடத்தில் இருந்து அகற்றிய நமது சங்கம் தான். எனவே தோழர்களே நமது சங்கத்தின் வலிமை உறுப்பினர் சந்தா சேர்ப்பு இயக்கத்தை மிக எழுச்சியோடு ஒரு இயக்கமாக நடத்தி உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு வருகிற 2021 ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள் முடித்திட அனைத்து வட்ட, மாவட்ட மையங்கள் திட்டமிட்டு செயலாற்றிட வேண்டியது நமது கடமையாகும்.

## வட்ட மாவட்ட மாநாடு

நமது சங்கத்தின் ஸ்தாபன கடமையான வட்ட, மாவட்ட மாநாடுகள் வருகின்ற 2021 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நமது அமைப்புக்கே உண்டான கம்பீரத்துடன் அனைத்து



மாவட்டங்களில் வட்டக் கிளை மாநாடுகள், மாவட்ட மாநாடுகள் சங்க அமைப்பு விதிகளின் படி சமூக அக்கறை யுடன் மாநாட்டினை மிக எழுச்சிகரமாக திட்டமிட்டு சிறப்பாக நடத்திட வேண்டும். மாநாடுகள் நடத்தி முடிக்கப்பட்டு மாநில மாநாட்டிற்கான தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டு மாநில மாநாட்டிற்கு அதிக அளவில் ஊழியர்களை திரட்டிட அர்ப்பணிப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும்.

இதற்கிடையில் அனைத்து மாவட்டங்களிலும் விரிவடைந்த மாவட்ட செயற்குழு, முன்னணி ஊழியர் கூட்டம் நடத்திடவும், இன்னும் கூடுதலாக இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் சங்கப் பணிகளிலும் சங்க பொறுப்புகளிலும் கொண்டு வருவதற்கு மாவட்டங்கள் பயிற்சி வகுப்புகள் நடத்திட மாநில செயற்குழு முடிவாற்றப்பட்டது.

## மாநில மாநாடு

நமது சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக ஆட்சியில் பல்வேறு போராட்டங்களை நடத்தியும் நமது கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை. அதனடிப்படையில் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு மண்டல அளவில் மாநாடு, மாநில அளவில் போராட்ட ஆயத்து மாநாடு, தொடர் மறியல், சிறை நிரப்பும் போராட்டம், கோட்டை முற்றுகை போராட்டம் நடத்தி அதிமுக ஆட்சியின் மக்கள் விரோத, ஊழியர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக களம் கண்டுள்ளோம்.

அதன் வெளிப்பாடுதான் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து மதுரையில் மிகப் பிரம்மாண்டமான முறையில் மாநாடு நடத்தி நமது நியாயமான கோரிக்கையான புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் வழங்க வேண்டும், பறிக்கப்பட்ட அகவிலைப்படி, சரண்டர், 21 மாத நிலுவை ஊதியம், சத்துணவு, அங்கன்வாடி, எம்ஆர்பி செவிலியர்கள், ஊர்ப்புற நூலகர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், சாலைப் பணியாளர்களின் 41 மாத காலத்தை பணிக் காலமாக வழங்க வேண்டும், அரசுத் துறை காலிப் பணியிடம் பூர்த்தி செய்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைக்கு ஆதரவு அளித்ததுடன் தேர்தல் அறிக்கையிலும் இடம்பெறச் செய்தது நமது இயக்கத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி. அதேபோல் 2003இல் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் ஓய்வூதியப் பலன் பறிக்கப்பட்டபோது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அதைத்தொடர்ந்து வலிமையான போராட்டத்தை நடத்தி 1.76 லட்சம் பேர் பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகும் அதை எதிர்கொண்டு மீண்டும் பணி நீக்கத்தை ரத்து செய்து, ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் திரும்பப்பெறப்பட்டது, எந்த முதலமைச்சரால் பழிவாங்கப்பட்டு எஸ்மா, டெஸ்மா பாய்ந்ததோ அதே முதலமைச்சரால் நமது சங்கத்தின் வலிமையான போராட்டத்தின் மூலம் அனைத்து கோரிக்கைகளும் மீண்டும் பெறப்பட்ட வரலாறு யாரும் மறுக்க முடியாது.

அதன் எதிரொலி தான் 2006இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் பகை முடிப்போம் பணி முடித்தோம். அதிமுக அரசை அப்புறப் படுத்தினோம். அதைத்தொடர்ந்து டாக்டர் கலைஞர் தலைமையிலான திமுக அரசு பதவி ஏற்றது. அப்போது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாடு சென்னை தீவுத்திடலில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. அந்த மாநாட்டில் மறைந்த டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அதேபோல் தான் தற்போது கடந்த அதிமுக அரசின் மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராக தமிழக மக்கள் ஒரே அணியில் திரண்டு தமிழகத்தில் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் தலைமையில் ஒரு புதிய அரசை தந்துள்ளார்கள். அதற்கு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஒரு காரணம் என்பது யாரும் மறுக்க முடியாது.

அதை நினைவில் கொண்டு மாநில மாநாடு சென்னையில் மிக எழுச்சியோடு இதுவரை நடைபெற்ற மாநாடுகளைவிட மிக பிரம்மாண்டமான முறையில் நடத்துவது, அந்த மாநாட்டிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அழைப்பது எனவும் முடிவாற்றப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் தமிழகம் முழுவதும் இருந்து லட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்கும் வகையில் மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் முழு வீச்சில் மாவட்டங்களில் தங்கள் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாநாடு

தமிழ்நாட்டில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஒரு நிர்ணயிக்கக்கூடிய சக்தியாக திகழும் என்பதில் ஐயமில்லை தோழர்களே.

இன்றைய சூழ்நிலையில் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை முடிந்து 3வது அலை வந்துவிட்டது என மருத்துவ வல்லுநர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். தோழர்கள் இதையும் கருத்தில் கொண்டும், ஒன்றிய அரசின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் ஒரு அரசியல் ஒளிந்திருக்கிறது என்பதை கீழே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் மூலம் நாம் தெரிந்து கொண்டு நம் தேசத்திலும் கீழே குறிப்பிட்டவாறு மத்திய ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகிற ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கு பின்புலத்தில் ஒரு அரசியல் ஒளிந்து கிடக்கிறது. அந்த அரசியலை நாமும், மக்களும் புரிந்து கொள்கிற விதத்தில் விரிவான பிரச்சாரங்களை முன்னெடுத்து செல்வோம்.

எனவே ஒன்றிய அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து நடைபெறும் நமது மாநில செயற்குழு முடிவான நமது ஸ்தாபனத்தை வலுப்படுத்தும் பணிகளிலும் எதிர்கால நடவடிக்கைகளிலும் முழுவீச்சில் களம் இறங்கி பணியாற்றுவோம்.

## பெகாசஸ் ஒன்றிய அரசின் இழிதொழில்

கடந்த 18.7.2021ஆம் தேதி மாலை சர்வதேச ஊடகங்களில் ஒரு முக்கிய செய்தி வெளியானது. இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பான என்.எஸ்.ஐ உருவாக்கிய பெகாசஸ் (Pegasus) எனப்படும் உளவு மென்பொருளின் துணை கொண்டு இந்தியாவின் பத்திரிகையாளர்கள், செயற்பாட்டாளர்கள் என பல நூறு பேரின் செல்பேசியை அரசு ஒட்டு கேட்பது என்பதுதான் அந்த செய்தி. இதற்கு ஆதாரமாக ஒட்டு கேட்கப்பட்டோரின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது. உதாரணமாக உங்களின் செல்பேசி உங்கள் வீடு என வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வீட்டுக்குள் உங்களுக்கே தெரியாமல் ஒருவர் ஒளித்து வைத்து விட்டால் எப்படி இருக்கும் என்று யோசித்து பாருங்கள்.

கடந்த ஒரே ஆண்டில் மட்டும் 243 மில்லியன் டாலர் சம்பாதித்த நிறுவனம் என்.எஸ்.ஓ இஸ்ரேலின் தொழில்நுட்ப குழுமமான என்.எஸ்.ஓ.வின் தொழில் உலக முழுவதும் உள்ள மக்களின் அந்தரங்க தகவல்களை உரையாடல்களை வேவு பார்ப்பதுதான்.

முதலாளித்துவம் ஈவிரக்கமற்ற லாபம் கிடைக்குமானால் அது என்ன வேண்டுமானாலும் செய்யும். தனது சொந்த முதலாளியையேகூட படுகொலை செய்யும். அப்படிப்பட்ட முதலாளித்துவத்திற்கு மக்களின் அந்தரங்க உரிமைகள் குறித்து எந்தவித கவலையும் இருக்கப்போவதில்லை. தகவல் தொழில்நுட்ப முக்கியத்துவம் மக்களை அவர்களது உணர்வுகளை, அவர்களது உணவை, அவர்களது உரையாடல்களை என அனைத்தையும் இடைவிடாமல் தன்வசப்படுத்துகிறது. அவற்றின்மூலம் இன்றைக்கு நாம் காணும் இணையதள கார்ப்பரேட் பெரும் நிறுவனங்கள் மிகவும் பெரும் கொள்ளை லாபங்களை ஈட்டி வருகிறது. இந்த மிகப்பெரும் சுரண்டலுக்கு அடிப்படைக் கருவியாக இருப்பது நமது கைகளில் தவழும் செல்பேசியும் அவற்றில் இடம் பெற்றுள்ள செயலிகளும் என்றால் மிகையல்ல.

ஒரு கார்ப்பரேட் முதலாளித்துவம் மக்களின் தகவல்களை தங்களுக்கானவை மட்டும் எனக் கருதி வைத்திருக்கக்கூடிய அந்தரங்க விவரங்களை உலக கார்ப்பரேட் கம்பெனிகளின் வியாபாரத் திற்காக பயன்படுத்துகிறது. மறுபுறம் அதே மக்களை ஒடுக்குவதற்காகவும், நவீன தொழில்நுட்பத்தை ஏவுகிறது. இதில் இரண்டாவது தான் இஸ்ரேலிய நிறுவனமான என்.எஸ்.ஓ. கட்டவிழ்த்துள்ள பெகாசஸ் மென்பொருள்.

உலகம் முழுவதும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களின் செல்பேசிகளில் அவர்களே அறியாத வண்ணம் மேற்படி நிறுவனம் பெகாசஸ் மென்பொருள் கள்ளத்தனமாக நிறுவியுள்ளது. அதன்மூலம் அவர்களது அனைத்து நடவடிக்கை களையும் வேவுபார்த்துள்ளது இந்த இழிசெயலை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களது ஒடுக்குமுறை திட்டத்திற்காக என்எஸ்ஓ நிறுவனம் செயல்படுத்தியுள்ளது.

இந்தியாவில் ஏற்கனவே ஒட்டுமொத்த மக்களையும் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வந்து அவர்களை ஒடுக்கும் நோக்கத் துடன் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண் டுள்ள ஒன்றிய அரசு இன ஒடுக்குதல் மற்றும்

இன அழிப்பையே தொழிலாக கொண்டுள்ள இஸ்ரேல் நாட்டின் நிறுவனத்துடன் தனது சொந்த மக்களை வேவு பார்ப்பதற்காக மென்பொருள் தயாரித்து அளிக்குமாறு நாடியதில் வியப்பேதுமில்லை.

ஆனால் முதலாளித்துவத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகளை சாத்தியப்படுத்தி இருப்பது அதில் பணியாற்றும் கோடானுகோடி உழைப்பாளி மக்கள்தான் ரகசியமாக வேவு பார்க்கும் பிரதமர் மோடி உள்ளிட்ட கேடுகெட்ட அரசுகளின் செயலை அந்தத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மற்றொரு பகுதி வெளிச்சத்திற்கு கொண்டு வந்துவிட்டது.

இந்தியாவில் 300க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மட்டுமல்ல நரேந்திர மோடி அவர்களின் சொந்த கட்சி தலைவர்களும் கூட வேவு பார்க்கப்பட்டது அம்பலமாகிவிட்டது.

இதுதொடர்பாக பிஜேபி எம்.பி.யும் மூத்த தலைவருமான சுப்பிரமணியன் சுவாமி ஒட்டு கேட்பு விவகாரம் மிகவும் பெரிதாக இருக்கிறது. நம்முடைய செல்போன் உரையாடல்கள் உள்ளிட்ட தகவல்களை சேகரித்து வரும் இஸ்ரேல் நிறுவனத்திற்கும், மோடி அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்காவில் நடந்த வாட்டர்கேட் ஊழல் போன்று பிஜேபிக்கு பெரும் சுமையாக மாறிவிடும் என்றார். அதேபோல் விஷ்வ ஹிந்து பரிஷத் தலைவர் பிரவீன் தொகாடியா செல்போன் ஒட்டு கேட்கப்பட்டுள்ளது.

அவ்வளவு ஏன் வேவு வேலை எதுவும் நடக்க வில்லை என்று நாடாளுமன்றத்தில் பதிலளித்த ஒன்றிய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வானி வைஷ்ணவின் மொபைல் போனும் பெகாஸ் மூலம் வேவு பார்க்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் ஒட்டு மொத்த மக்களையும் ஏமாற்றும் ஒன்றிய அரசு (மோடி) தன்னுடைய கட்சி மற்றும் இயக்கத்தை சார்ந்தவர்களையும் கூட ஏமாற்றி வேட்டையாடும் கட்டத்தை எட்டிக் கொண்டிருக்கிறது.

தொழில்நுட்பம் சார்ந்த இத்தகைய எதேச்சதிகார அரச கட்டமைப்புக்கு எதிராக மக்களை தயார்படுத்துவது எப்படி என்பது தான் நம் அனைவருக்கும் விடுக்கப்பட்டிருக்கும் சவால்.

## பாதுகாப்புத் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

மகாபாரத கதையில் பாண்டவர்களின் அஞ்ஞான வனவாசத்தின் போது பீமன் அரக்கனை கொன்று அவனது கொடுமைகளிலிருந்து கிராம மக்களை காப்பாற்றுவான். தற்போதைய நிலையில் அகோரப் பசியில் இருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக நாட்டில் உள்ள அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் இலக்கு வைத்து, நாள் குறித்து தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. நாட்டின் பாதுகாப்புத் துறையும் இதிலிருந்து தப்பவில்லை. அதனை தொடர்ந்து பாதுகாப்புத் துறை ஊழியர்கள், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திட அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்களது போராட்ட அறிவிப்பு தேசத்தை பாதுகாப்பு நடவடிக்கையாகும்.

தொழிற் சங்கங்கள் போராட்ட அறிவிப்பு கொடுத்தால் அவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி போராட்டத்தை தடுக்க முயற்சிப்பதும் உடன்பாடு காண்பதுவுமே நல்ல அரசாங்கத்தின் ஆக்கப்பூர்வமான செயல்பாடு. ஆனால் ஒன்றிய அரசோ வேலை நிறுத்த அவசர சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. இது தேசபக்த செயல் அல்ல.

ஏற்கனவே தொழிலாளர் உரிமைகளை பறிப்பது என பல்வேறு சட்டங்களை கொண்டு வந்து தொழிலாளர்களின் வாழ்வில் மண்ணை அள்ளி போட்டிருக்கிறது கார்ப்பரேட் கூட்டு களவாணி அரசான பிஜேபி அரசு. இப்போது தொழிலாளர்களின் வாழ்க்கையையல்ல, நாட்டின் பாதுகாப்பை குழி தோண்டி புதைக்கும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது. எனவே இத்தகைய தேச விரோத நடவடிக்கையை ஒன்றிய அரசு கைவிட்டு வேலை நிறுத்த தடை சட்டத்தை திரும்ப பெற வேண்டும். அதுவே நாட்டுக்கு நல்லது.

இப்போது எண்ணை நிறுவனங்கள் பெருமளவு அரசின் பொதுத்துறை நிறுவனங் களிடம் இருக்கின்றன. ரிலையன்ஸ் தவிர.

இப்படி இருக்கும்போது ஏற்கனவே பெட்ரோலிய பொருட்களின் விலையும் நாளொரு விலையும் பொழுதொரு மதிப்பாக அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்நிலையில் எண்ணெய் நிறுவனங்கள் அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பை அதிகரிக்கும் முடிவை ஒன்றிய அமைச்சரவை 2021ஜூலை 22 அன்று எடுத்துள்ளது. இந்த முடிவு எண்ணெய் நிறுவனங் களை அப்படியே முழுவதுமாக ஒப்படைக்கும் வகையில் 49%லிருந்து உச்சவரம்பை 100%ஆக மாற்றி இருக்கிறது ஒன்றிய மோடி அரசு.

அதுமட்டுமன்றி பொதுத்துறை நிறுவனமான பாரத் பெட்ரோலியம் நிறுவனம் தனியார்மய மாக்கும் நோக்கில் தான் முதலீட்டு உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக செய்திகள் நாளிதழ்களில் வெளியாகியுள்ளன. இந்த தகவல் ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை கூட்டுக் களவாணி முதலாளித்துவத்திற்கு கார்ப்பரேட் நிறுவனங் களுக்கு உலகளாவிய அந்நிய பகாசுரக் கம்பெனிகளுக்கு படையல் செய்வதாகவே இருக்கிறது. பகாசுர கம்பெனிகளின் அகோரப் பசிக்கு இந்திய நிறுவனங்களை வாரிவழங்கும் ஒன்றிய அரசை எதிர்த்து நாட்டு மக்கள் வெகுண்டெழ வேண்டும். மக்கள் சக்தியே இவர்களைத் தடுத்து நிறுத்தும்.

## மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் பிஜேபி கட்சி நிர்வாகிகள்

இந்திய பொதுத்துறை நிறுவனங்களை மகாரத்னா என்றும், நவரத்னா என்றும், மினி ரத்னாக்கள் என்றும் போற்றுகிறோம். இந்தியா வில் 146 மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த ரத்னங்களை சத்தமில்லாமல் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் கார்ப்பரேட் கூட்டு களவாணி நண்பர்களுக்கு தாரை வார்க்கப்படும் விதத்தால் இந்நிறுவனங்கள் முதன்மையான இயக்குனர் பொறுப்புகளில் பிஜேபி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிர்ச்சிகர தகவலை இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டின் செய்தி வெளிப்படுத்தியுள்ளது.

146 மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் 96 நிறுவனங்களின் விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நிறுவனங்களில் மொத்தம் 171 சுயேச்சையான இயக்குனர் பதவிகள் உள்ளன. இவற்றில் 67 பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாக குழுவில் முடிவு எடுக்கும் அதிகாரம் கொண்ட சுயேச்சை இயக்குனர்கள் பதவியில் நியமிக்கப்பட்டுள்ள 86 பேர் நேரடி பிஜேபி நிர்வாகிகள் என்பது தெரியவந்துள்ளது.

பெல் நிறுவனம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், இந்திய உருக்கு ஆணையம், இந்துஸ்தான் பெட்ரோலியம், கெயில் இந்தியா நிறுவனம், பவர் கிரிட் கார்ப்பரேஷன், இந்திய ஷிப்பிங் கார்ப்பரேஷன், ஆயில் இந்தியா நிறுவனம், ராஷ்டிரிய இஸ்பட் நிகாம் லிமிடெட், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், இந்துஸ்தான் ஏரோநாட்டிகல், இந்திய விமான நிலைய ஆணையம் என பட்டியல் நீள்கிறது. இந்நிறுவனங்களின் முடிவு எடுக்கும் அதிகாரம் கொண்ட இயக்குனர்களாக நியமிக்கப்பட்டுள்ள பிஜேபி நிர்வாகியின் வேலை இந்நிறுவனங்களை படிப்படியாக தனியார்மயமாக்குவதற்கான நடவடிக்கைகளை உள்ளிருந்து தீவிரமாக்குவது.

இவற்றில் பெரும்பாலானவை மகாரத்னா என்று போற்றப்படுகிற ஆண்டுக்கு ரூபாய் 25 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக லாபம் சம்பாதித்து, நாட்டிற்கும் மக்களுக்கும் சேவை யாற்றி கொண்டிருக்கிற மிகப் பிரம்மாண்டமான சொத்துகள் கொண்ட பல்லாயிரக்கணக்கான திறன்மிக்க ஊழியர்களையும், கட்டமைப்பையும் கொண்ட நிறுவனங்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு தாரை வார்ப்பது என்பதில் மிகத் தீவிரமாக இறங்கி உள்ளது. ஒன்றிய அரசின் கார்ப்பரேட் கூட்டு கணவானி நண்பர்கள், பொதுத்துறை நிறுவனங்களையும், அவற்றின் சொத்துக்களையும் கபளீகரம் செய்வதற்காக வேட்கையோடு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எளிதாக உதவும் பொருட்டு ஒன்றிய அரசு தனது கூலிப்படையை வைத்து நிறுவனங்களின் இயக்குனர்களாக நியமித்திருக்கிறது.

ஏற்கனவே ஒன்றிய அரசின் கூட்டுக் களவாணிகள், இந்திய மக்களின் செல்வங்களை தங்கள் வசம் மடைமாற்றி வாரிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் 75 கோடிக்கும் அதிகமான மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியிருக்க இதே காலத்தில் மகாகோடீஸ்வரர்

களின் எண்ணிக்கை 102லிருந்து 140ஆக உயர்ந்துள்ளது. அது மட்டுமல்ல அவர்களது கைகளில் முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு செல்வம் 600 பில்லியன் டாலர் அளவிற்கு குவிந்துள்ளது. இந்த நிலையில் பொதுத்துறை நிறுவனங்களை உள்ளிருந்தே அரித்து அளிக்கும் புற்றுநோய் செல்களாக பிஜேபி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு இருப்பது கடும் கண்டனத்துக் குரியது.

## பெட்ரோல் டீசல் விலை உயர்வு மூலம் ஒரே ஆண்டில் 88% வருவாய் அதிகரிப்பு

கடந்த 2020ஆம் ஆண்டில் கொரோனா கொள்ளைக்கு இடையிலும் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை ஒன்றிய அரசு கடுமையாக உயர்த்தியது.

பெட்ரோல் மீதான கலால் வரியை லிட்டருக்கு 19 ரூபாய் 98 காசிலிருந்து 32 ரூபாய் 90 காசுகளாவும், டீசல் மீதான கலால் வரி 15 ரூபாய் 83 காசியிலிருந்து 31 ரூபாய் 08 காசுகளாகவும் உயர்த்தப்பட்டது.

இதன் காரணமாக பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி மூலமாக வருவாய் ஒரே ஆண்டில் 88% அதிகரித்துள்ளது.

2019-20ஆம் நிதி ஆண்டில் பெட்ரோல் டீசல் ரூபாய் ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடியாக மட்டுமே இருந்த நிலையில், வரி உயர்த்திருப்ப தால் சென்ற ஆண்டு கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. அதாவது 2020-21 நிதியாண்டில் ரூபாய் 2 லட்சத்து 13 ஆயிரம் கோடி கிடைத்துள்ளது. 2021ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான மாதங்களில் மட்டும் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி வசூல் ரூபாய் ஒரு லட்சம் கோடி கிடைத்தது. இதில் விமான எரிபொருள் மீதான வரி வருவாயும் அடங்கும்.

எண்ணெய் மீதான விலை அதிகரிப்பு காரணமாக 2020 ஏப்ரல் முதல் 2011 மார்ச் வரை பெட்ரோல் மற்றும் டீசலில் இருந்து கிடைக்கும் கலால் வரியானது ரூபாய் 3 லட்சத்து 35 ஆயிரம் கோடியாக இருந்துள்ளது. இது 2019-20ஆம் நிதியாண்டில் ஒப்பிடும் போது கிட்டத்தட்ட இருமடங்கு வசூலாகும்.

நடப்பு 2021-22 நிதியாண்டில் இதுவரை பெட்ரோல் 39 முறை மற்றும் டீசல் விலை 36 முறை அதிகரித்துள்ளது. பெட்ரோல் விலை ஒருமுறையும், டீசல் விலை 2 முறையும் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவே பெட்ரோல் விலை கடந்த நிதியாண்டில் 76 முறை உயர்த்தப்பட்டபோது 10 முறை குறைக்கப்பட்டது. டீசல் விலை 73 அதிகரிக்கப்பட்டு 24 முறை குறைக்கப்பட்டது

## ஸ்டான் சுவாமி சிறையிலேயே காலமானார் இதற்கு ஒன்றிய அரசே காரணம்

பழங்குடி மக்களுக்காக பாடப்பட்டு வந்த சமூக ஆர்வலர் பாதிரியார் ஸ்டான் சுவாமி (84) காலமானார். எல்கர் பரிஷத் வழக்கில் தலேஜா சிறையில் இருந்தவர். உடல்நலக்குறைவால் காலமானார்.

தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த 84 வயதான இயேசு சபை பாதிரியார்கள் ஸ்டான் சுவாமி கடந்த 2020ஆம் ஆண்டு என்ஐஏ மூலம் ஜார்கண்டில் கைது செய்யப்பட்டார். 2018ல் பீமா கோரேகான் வன்முறையை தூண்டினார், கல்கார் பரிஷத் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியதன் மூலம் வன்முறை ஏற்படுத்தியதாகவும், மாவோயிஸ்ட் அமைப்புகளுடன் தொடர்பு இருந்ததாகவும் இவர் மீது பொய்யான புகார்கள் புனையப்பட்டன. ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் ஆதிவாசி மற்றும் தலித் மக்களுக்கு சேவை செய்ய வந்த போது தேசிய புலனாய்வு அமைப்பு மூலம் திடீரென கைது செய்யப்பட்டார்.

என்.ஐ.ஏ. நீதிமன்றம் மூலம் விசாரிக்கப்பட்டு வந்தார். இரண்டு முறை ஜாமீன் தாக்கல் செய்தும் கூட நீதிமன்றம் அவரது ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டது.

அவ்வாறு நிராகரித்த நீதிபதி என்ன சொல்லியிருந்தார் பாருங்கள். ஓர் இனத்தின் கூட்டு நலன் விண்ணப்பதாரரின், தனிநபர் சுதந்திரத்தை விட முக்கியமாகும். அவருடைய வயது முதிர்ச்சியோ அல்லது உடல் நலமின்றி இருக்கிறார் என்று கூறப்படுவதோ அவருக்கு ஆதரவாக அமைந்துவிடாது. இதுதான் ஒரு நீதிபதியால் 84 வயதுள்ள ஒருவர் குறித்து பார்க் கின்சன் எனும் ஒடுக்குவாதத்தால் பாதிப்புக்கு

உள்ளாகி நடப்பதற்கும் உணவு அருந்துவதற்குமே சிரமப்பட்டுக் கொண்டிருந்த ஒருவர் குறித்து எழுதப்பட்டுள்ளதாகும். இதே நீதிமன்றம்தான் நீராகாரம் அருந்துவதற்கு உறிஞ்சு குழாய் (Sipper) அளிப்பதற்கு கூட உத்தரவு பிறப்பிக்க மறுத்திருந்தது இந்த வெட்கக்கேடான சம்பவம். நம் நீதித்துறை அமைப்பில் ஒரு கரையாக இருந்திடும் (பத்திரிகையில் வந்த செய்தி) நீதித்துறை பற்றிய நமது ஆசான் எம்.ஆர்.அப்பன் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. (Purchase the Judgement)

ஒட்டுமொத்த சம்பவத்திலும் மிகவும் மோசமான அம்சங்கள் இப்போது வெளி வந்துள்ளது. ஸ்டான் சுவாமி மரணம் அடைந்த மறுநாள் அமெரிக்க டிஜிட்டல் தடய அறிவியல் நிறுவனமான "அர்சனல் கன்சல்டிங்" (Arsenal Consulting) நிறுவனம் மூன்றாவது அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் திட்டமிட்டு புனையப்பட்ட வழக்கு என்றும் இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இந்த சதித் திட்டம் நடைபெற்றுள்ளதாக கூறுகிறது.

இந்நிலையில் ஸ்டான் சுவாமி போதிய மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட வில்லை என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் கண்டித்திருக்கிறது. மேலும் ஐ.நா.வின் மனித உரிமைகள் பாதுகாப்பு பிரிவினர் மேரிலால் இதுகுறித்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். ஸ்டான் சுவாமி உடல்நிலை மிகவும் மோசமானதை யடுத்து அவருக்கு வென்டிலேட்டர் பொருத்தப் பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்ததாக செய்திகள் வெளியானதை கேட்டு அதிர்ச்சி அடைந்ததாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஜூலை 5ஆம் தேதி ஸ்டான் சுவாமி மரணமடைந்தார். அவர் சிறையிலேயே உடல்நலக் குறைவின் காரணமாக மரண மடைந்தார். இது சமூக ஆர்வலர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## கியூபா மீதான பொருளாதாரத் தடையை விலக்கிடுக

உலகின் சர்க்கரை கிண்ணம் என்று அழைக்கப்படும் சின்னஞ்சிறு சோசலிச நாடான கியூபாவின் மீதான அமெரிக்காவின் பொருளாதார தடை 60 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது. உலக நாடுகள் கியூபாவுடன் சுதந்திரமான வர்த்தகத்தை மேற்கொள்ள தடை மிக மோசமான ஹெல்ம்ஸ்-பர்ட்டன் சட்டம் ஆகியவற்றை அமலாக்கி தொடர்ச்சியாக கியூபாவை வஞ்சித்து வரும் அமெரிக்கா, டொனால்டு டிரம்ப் அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்த நேரத்தில் மேலும் கூடுதலாக 243 தடைகளையும் விதித்தது. அமெரிக்காவின் இத்தகைய மனிதநேயமற்ற அராஜக நடவடிக்கைகள் வெறுமனே பொருளாதார தடைகள் என்பதை விடவும் உன்னதமான சோஷலிச சித்தாத்தத்தின் மீதான முதலாளித்துவத்தின் அருவருப்பான தாக்குதல்தான் என்பது தெளிவு. பொருளாதார சிரமங்களை ஏற்படுத்தி சோசலிச அரசின் மீது அதிருப்தியை உருவாக்கி அரசை கவிழ்க்க வேண்டும் என்பது 1960லிருந்து அமெரிக்க அரசின் கொள்கை.

இந்நிலையில் கியூபா மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை திரும்பப் பெற வேண்டுமென அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பெற்றிருந்த ஒரு தீர்மானத்திற்கு இந்தியா உட்பட 184 நாடுகளும் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளன. ஆனாலும் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்துள்ளது. ஒருபுறம் பொருளாதாரத் தடையை விதிக்கும் அமெரிக்கா மறுபுறத்தில் தங்கள் ஆதரவாளர்களை கொண்ட கலகங்களை அமெரிக்காவின் மியாமி, புளோரிடா பகுதிகளிலும், கியூபாவிலும் நடத்த தொடர் முயற்சியை எடுத்து வருகிறது. அண்மையில் நடைபெற்ற அத்தகையதொரு முயற்சியையும் கோடிக்கணக்கான கியூபா மக்கள் வெற்றிகரமாக முறியடித்துள்ளார்கள்.

பொருளாதார மற்றும் வர்த்தக தடைகளின் மூலமாகவும், உள்நாட்டு கலவரங்களை தூண்டி விடுவதன் மூலமாகவும் கியூபாவை வீழ்த்தி விடலாம் எனும் அமெரிக்காவின் நடவடிக்கை களை கண்டிப்பதோடு கியூபா மீதான விதிக்கப்பட்ட தடைகளை முழுமையாக விலக்க வேண்டுமெனும் கோரிக்கையை முன்வைத்து உலகம் முழுவதும் அனைத்து மக்களும் கியூபா மக்களுக்கு ஆதரவு அளித்திட வேண்டும். (உ-த. கொரோனா காலத்தில் உலகில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு கியூபாவின் மருத்துவர்கள் சென்று சிகிச்சை அளித்தது உலகில் உள்ள மக்கள் அனைவராலும் பாராட்டு பெற்றது)

## பெரு எழுகிறது

தென் அமெரிக்க கண்டத்தில் பெரிய நாடுகளில் ஒன்று பெரு. பல்லாண்டு காலமாக நடந்து கொண்டிருந்த அமெரிக்க கைக்கூலி ஆட்சிக்கு எதிராக எழுந்த வெகுமக்கள் கிளர்ச்சிகளின் பின்னணியில் இடதுசாரிக் கட்சியான "சுதந்திரப் பெரு கட்சி" கடந்த ஜூன் 6 அன்று நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றது. கட்சியின் தலைவராக நாட்டின் உழைப்பாளி மக்களது நேசத்திற்குரிய தலைவராக 51 வயது நிரம்பிய பெட்ரோ காஸ்டிலோவை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்.

இவர் ஒரு பள்ளி ஆசிரியர். 2017ஆம் ஆண்டு அரசுக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களை அணி திரட்டி போராட்டத்தில் இறங்கியவர். அப்போது முதல் ஆசிரியர்களின் தலைமையில் நடைபெற்ற எண்ணற்ற இயக்கங்களில் ஒரு தலைசிறந்த தொழிற்சங்கத் தலைவராக மிளிர்ந்தார் காஸ்டிலோ.

மார்க்சிய தத்துவத்தை உயர்த்திப்பிடிக்கும் கட்சி சுதந்திர பெரு கட்சி. இக்கட்சியின் தலைவராக உயர்ந்து ஜனாதிபதி தேர்தலில் 50.12 சதவீதம் வாக்குகள் பெற்று மாபெரும் வெற்றி பெற்றுள்ளார். இவரை எதிர்த்து போட்டியிட்ட பெண் வேட்பாளர் 49.27 சதவீதம் வாக்குகளை கெய்க்கோ புஜிமோரி பெரு நாட்டில் அமெரிக்காவின் கைக்கூலி எதேச்சதிகார ஆட்சி நடத்திய தீவிர வலதுசாரி ஆவார்.

பெரு நாட்டு ஜூன் 6 தேர்தலில் இடதுசாரி வேட்பாளரை எந்தவிதத்திலும் வெற்றிபெற விடக்கூடாது என்று வலதுசாரிக் கட்சிகள் பல்வேறு நாசகரமான வேலை செய்தனர். ஆனால் நாட்டு ஆசிரியர்கள், உழைப்பாளி மக்கள், பழங்குடி மக்கள் அனைத்து தரப்பு மக்களும் பேராதரவு தந்தார்கள்.

தேர்தல் ஆணையம் மீது வலதுசாரி வேட்பாளர் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள். காஸ்டிலோ ஆதரவாக தேர்தல் ஆணையம் நின்றது என்பது அதுமட்டுமல்ல வலதுசாரி வேட்பாளர் குற்றம் பொய்யானவை என தேர்தல் ஆணையம் நிரூபித்தது. பெரும்பான்மை வாக்குகள் பெற்ற காஸ்டிலோவை ஜனாதிபதியாக அறிவிக்க வேண்டும் என்ற அனைத்து தரப்பு மக்கள், முற்போக்கு சக்திகள் வேலைநிறுத்தம் நடத்தின. பெரு நாட்டு மக்கள் வீதிகளில் திரண்டு காஸ்டிலோவுக்கு ஆதரவாக முழக்கமிட்டனர். வலதுசாரிகள் சீர்குலைக்கும் வேலைகளையும், ராணுவத்தையும் பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி மேற்கொண்டார்கள். ராணுவ தளபதியும் அரசியல் சட்டத்தை உறுதி செய்தார்.

இத்தகைய பின்னணியில் ஜூலை 19 அன்று தேர்தல் ஆணையத்தின் முடிவுகளை ஏற்பதாக கெய்கோ பிஜிமோரி அறிவித்தார். நம் நாட்டில் நடப்பது மீண்டும் மறு வாக்கு மதிப்பு செய்ய வேண்டும் என்றார். அதன் பின்னரும் காஸ்டிலோ 44 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்றார் என்பது உறுதி செய்தது.

இந்நிலையில் பெட்ரோ காஸ்டிலோ ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வ அறிவிப்பு. இது பெருவாரியான உழைப்பாளி மக்களின் மத்தியில் பெரும் மகிழ்ச்சியையும் அதேபோல் பெரும் சுரங்க கம்பெனிகள், கார்ப்பரேட் முதலாளிகள் மத்தியில் அதிர்ச்சியில் உள்ளார்கள். உலகிலேயே மிக அதிகமாக தாமிரம் உற்பத்தி செய்யும் இரண்டாவது பெரிய நாடு பெரு என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் நலன் தரும் வகையில் சட்டத்தை மாற்றி அமைக்கப்படும். இனிமேல் ஏழ்மையை விரட்டி அளிக்கப்படும், தலைசிறந்த தொழில் நுட்பத்தைப் உண்டாக்குவோம். மக்களின் ஆதரவோடு பெரு நாட்டை மறுகட்டுமானம் செய்வோம். ஜூலை 20 புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்க உள்ளார்.

சுகாதாரத்திற்கும், கல்விக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கியூபா, வெனிசுலா ஆகிய நாடுகளில் மக்களுக்கான ஒரு கம்யூனிஸ்ட் முன்மாதிரி நடைமுறையில் இருக்கிறது. அவற்றின் படிப்பினைகளை உள்வாங்கி செயல்படுவோம்.

அமெரிக்காவின் பல்வேறு நிர்ப்பந்தங்களை பெரு நாட்டு மக்கள் இடதுசாரி ஆதரவாக தெருக்களில் முழக்கம் இட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

பெரு நாட்டில் கடந்த 200 ஆண்டுகளில் எண்ணற்ற ராணுவ கலகங்கள் நடந்துள்ளன. சர்வாதிகாரிகள் பலர் ஆட்சி நடத்தி உள்ளார்கள். 1980ஆம் ஆண்டு தான் அனைவருக்கும் வாக்குரிமை என்று உறுதி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மூன்று ஜனாதிபதிகள் பதவி வகித்தார்கள். ஏகாதிபத்திய ஆதரவுடன் ஆட்சி நடத்தினார்கள். 1995க்கு பிறகு 5 ஆண்டு காலம் புஜிமோரியின் சர்வாதிகார ஆட்சி நடந்தது. அப்போது பெரு நாடு முழுவதும் எளிய மக்களின் நல்லாட்சிக்காக எண்ணற்ற போராட்டங்களை பெரு சந்தித்துள்ளது.

இத்தகைய அரசியல் பின்னணியில்தான் முதன்முதலாக இடதுசாரி மார்க்சிய சித்தாந்தத்தை உயர்த்திப் பிடிக்கும் சுதந்திரம் பெரு ஆட்சிக்கு வந்துள்ளது பெட்ரோகாஸ்டிலோ தலைமையில் பெரு எழுகிறது.

## அமெரிக்காவை உலுக்கிய சுரங்க தொழிலாளர்கள்

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் புருக்வுட் நகரில் வாரியர், மெட்கோல் எனும் சுரங்க கார்ப்பரேட் கம்பெனியை எதிர்த்து அந்நிறுவனத்தில் பணியாற்றும் சுரங்க தொழிலாளர்கள் கடந்த 4 மாத காலமாக நடத்தி வந்த மாபெரும் போராட்டம் வெற்றிகரமாக முடிவுக்கு வந்ததுள்ளது.

கடந்த ஏப்ரல் முதல் இவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். திடீரென இத்தொழிலாளர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு 6 டாலர் என்ற அடிப்படையில் கூலியை வெட்டுவதாக நிறுவனம் அறிவித்தது. எதிர்த்து கொந்தளிப்புடன் வேலைநிறுத்தம் துவங்கியது.

தொடர் போராட்டம் நடைபெற்றபோது நிர்வாகம் கீழே இறங்கி வர மறுத்தது. எனினும் இடைவிடாமல் நிறுவனத்தின் வாயிலில் தினந்தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் முழக்கமிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

மேற்கண்ட நிறுவனம் பிளாக்ரான் எனப்படும் மற்றொரு கார்ப்பரேட்டுன் இணைந்து உலகின் மிகப்பெரிய சுரங்க நிறுவனங்களில் ஒன்றாக வளர்ந்திருக்கிறது. 3 டிரில்லியன் டாலர் (ஒரு ட்ரில்லியன் ஒரு லட்சம் கோடி) முதலீடுகளையும் 75 லட்சம் பங்குகளையும் கொண்டிருக்கிற இந்நிறுவனம் தனது தொழிலாளர்களை சுரண்டி கொழுத்திருக்கிறது.

கொரோனா ஊரடங்கு காலத்திற்குப் பிறகு லாபம் குறைந்துவிட்டதாக கூறி தொழிலாளர் களின் வயிற்றில் அடித்துள்ளது. அதை எதிர்த்து பெரும் போராட்டம் எழுந்துள்ளது.

## பிரேசிலில் போராட்டம்

பிரேசிலில் கொரோனா பெருந்தொற்றை முறையாக கையாளாமல் பெரும் துயரத்திற்கு காரணமாக இருந்த பாசிச ஜனாதிபதி ஜெய்ர் பொல்கானரோவுக்கு எதிராக மிகப்பெரிய போராட்டம் நடைபெற்று வருகிறது.

அந்நாட்டில் 26 மாநிலங்களில் லட்சக்கணக் கான மக்கள் கூடி கடந்த மாதம் இறுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவோ, பாலோ அந்நகரில் மையப் பகுதியில் சுமார் 70 ஆயிரம் பேர் கூடிய போராட்டம் நடத்தப்பட்டது.

பிரேசில் தொழிலாளர் கட்சி, சோசலிஸ்ட் கட்சி, ஜனநாயக தொழிலாளர் கட்சி, சோசலிஸ்ட் மற்றும் சுதந்திர கட்சி, ஐக்கிய சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சி உள்ளிட்ட அனைத்து இடதுசாரி இயக்கங்களும் ஒன்றிணைந்து பொல்சானரோ வெளியேறு என்ற முழக்கத்தை எழுப்பினார்கள்.

உலகில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக அதிக மக்களை கொரோனாவுக்கு பலி கொடுத்த நாடு பிரேசில். சுமார் 6 லட்சம் பேர் பலியாகியுள்ளனர்.

ஜனாதிபதி பொல்சானரோ, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் வகையிலோ உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் மக்களை பலி கொடுத்து வருகிறார் என கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

நமது ஆசான் தோழர் எம்.ஆர்.ஏ. அவர்கள் வழிகாட்டிச் சென்ற பாதையில் சோர்வின்றி தொய்வின்றி பயணிப்போம். இந்திய இறையாண்மையை பாதுகாத்திடவும், உலக முழுவதும் உள்ள உழைப்பாளி மக்களுக்கு எதிராக அமுல்படுத்தப்படும் கொள்கைகளை வேரோடு சாய்ப்போம் தோழர்களே. ■

# மாமனிதன் ஜீவா

"காலுக்குச் செருப்பு மில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோமடா-என் தோழனே
பசையற்றுப் போனோமடா"



"பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாய ழுவாள்
வேலையின்றி நாம
ழுவோம்-என் தோழனே
வீடு முச்சூடும் அழும்"

"கோடிக்கால் பூதமடா..தொழிலாளி கோபத்தின் ரூபமடா" எனும் கவிதைகள் காலத்தால் அழியாமல் ஜீவாவை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் எனின் மிகையன்று.

சுதந்திரப் போராட்ட வீரராக, பொதுவுடமைப் போராளியாக, மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கியவர் தோழர் ஜீவா.

தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவராக விளங்கிய பொதுவுடமைப் போராளி தோழர் ஜீவா, பொது வாழ்வில் நாற்பது வருடம் ஈடுபட்டு, பல்வேறு சிறைத்தண்டனைகளையும் சோதனைகளையும் தாங்கிய தியாகி. தன்னுடைய ஆயுள் காலத்தில் பத்து வருடங்கள் சிறையில் கழித்த இவர், காந்தியவாதியாக, சுயமரியாதை இயக்கப் பற்றாளராக, இலக்கியவாதியாக பொதுவுடமை இயக்கத் தலைவராக செயலாற்றியவர்.

ஜீவா என்று அன்புடன் அழைக்கப்படும் தோழர் ப.ஜீவானந்தம் சிறு வயதிலேயே காந்தியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போதே கவிதைகளும், நாடகங்களும் எழுதி நடிக்கவும் செய்தார். தமிழிலக்கியம் மீது தனி ஆர்வம் கொண்டிருந்தார். பெரும் இலக்கியவாதியாகவும், பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார். குடியரசு, ஜனசக்தி, பகுத்தறிவு, புரட்சி, தாமரை ஆகிய இதழ்களுக்குப் புரட்சிகரமான கட்டுரைகளும், கவிதைகளையும் படைத்தவர்.

பொதுவுடமை மேடைகளில் முதல் முறையாக தமிழ் கலாச்சாரத்தோடு கலந்துரையாடல் நடத்தித் தமிழிலக்கியம் பேசியவர் ஜீவா. தமிழோடு சேர்த்து கட்சியையும் வளர்த்தார். காங்கிரஸ் ஆட்சியில் கம்யூனிஸ்ட்கள் வேட்டையாடப்பட்டபோது, ஜீவா தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டார். ஜீவாவிற்கு பொதுவுடைமை ஒரு கண் என்றால், மேடையில் இலக்கிய முழக்கம் செய்வது இன்னொரு கண் போல.

இலக்கிய மேடைகளில் ஜீவா ஏறினால், அவரது பேச்சை ரசிக்க அக்காலத்தில் இளைஞர்கள் திரண்டுவருவர். ஒரு தேர்ந்த தமிழறிஞர் போல அவர் நாவாடுவதை தமிழறிஞர்களும் பெரிதும் ரசிப்பர். அக்காலத்தில் அது எல்லா தலைவர்களுக்கும் கிடைக்காத பேறு.

இளமையில் கடலூர் காங்கிரஸ் எம்.எல்.ஏ. மகளாகிய கண்ணம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். இவரது மறைவிற்குப்பின் *1948* ஆம் ஆண்டு பத்மாவதி என்பவரை கலப்புத் திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு குமுதா, உஷா, உமா என்ற மகள்களும் மணிக்குமார் என்ற மகனும் பிறந்தனர்.

பெரியாரோடு இணைந்து வைக்கம் போராட்டம், சுசீந்திரம் தீண்டாமை இயக்கம் ஆகியவற்றில் ஈடுபட்டு தீண்டாமைக்கு எதிராகப் போராடியவர் ஜீவா.

மாவீரன் பகத்சிங் தூக்கிலிடப்பட்ட காலக் கட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட தூக்கு தண்டனைக்கு எதிராக வெகுண்டெழுந்தார். அனல் கக்கும் பேச்சால் அன்றைய இளைஞர்களின் மனதில் புரட்சிக் கனலை மூட்டினார். சிறையிலிருந்தபடி பகத்சிங் தன் தந்தைக்கு எழுதிய 'நான் ஏன் நாத்திகனானேன்?' எனும் நூலை தமிழில் மொழி பெயர்த்தார். அதை வெளியிட்டவர் பெரியார். பரபரப்பான இந்த

நூலை வெளியிட்டதற்காக, ஜீவாவின் கை கால்களை கட்டி விலங்கிட்டு, திருச்சி முழுவதும் வீதி வீதியாக இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர் காவல்துறையினர்.

1930களில் தன்னை சுயமரியாதை இயக்கத்தினராக அடையாளப்படுத்திக் கொண்ட ஜீவா, காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுக் கம்யூனிஸ்ட் தோழர்களுடன் சிறை சென்றார்.

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் (1939--1942) பம்பாயிலும் சிறையிலும் தன் பெரும்பகுதியை செலவிட்டார். 1948-ல் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது இலங்கைக்குச் சென்று செயலாற்றினார்.

1952- ம் ஆண்டு வண்ணாரப்பேட்டை தொகுதியில் இருந்து சட்டமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டார். சட்ட மன்றத்தில் தனது பேச்சால் மற்ற தலைவர்கள் அனைவரையும் கவர்ந்தார் ஜீவா. அதுவரை பொதுமக்களைக் கவர்ந்த ஜீவாவின் பேச்சால், தலைவர்களும் ஈர்க்கப்பட்டனர். எதிராளியையும் பேச்சால் தன் வசப்படுத்தும் தனித்துவம் மிக்கவராக ஜீவா விளங்கினார். ஜீவா சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரை "சட்டப்பேரவையில் ஜீவா" என்று நூலாகவும் வெளிவந்துள்ளது.

எதிரணியில் இருந்தாலும் அனைத்துத் தலைவர்களுடனும் நட்பு பாராட்டியவர் ஜீவா. காமராஜரால் பெரிதும் மதிக்கப்பட்டவர். நகைச்சுவை மேதை கலைவாணரின் பெருமதிப்பிற்குரியவராக ஜீவா இருந்தார். தலைமறைவு வாழ்க்கையில் ஜீவாவின் பெரும்பகுதி நேரம் கலைவாணரின் பாதுகாப்பில் கழிந்தது.

இலக்கியத்தின் பால் தீராத தாகம் கொண்ட ஜீவா, தனது இறுதிக் காலத்தில் கலை இலக்கியப் பெருமன்றத்தைத் துவக்கினார் . இலக்கியத்தை மையப்படுத்தி 'தாமரை' இலக்கிய இதழைத் தொடங்கினார். 'ஜனசக்தி' நாளிதழையும் தொடங்கினார்.

தன் இறுதிக்காலம் வரை மக்களிடையே வாழ்ந்த ஜீவா, வறுமையிலேயே கழித்தார். ஜீவாவின் இறுதிக்காலம் வறுமையிலேயே கழிந்தது. ஒருமுறை அப்போதைய முதல்வர் காமராஜர் சென்னையில் ஜீவா வசித்துவந்த பகுதியில் ஒரு அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். காமராஜரின் உதவியாளர், திறப்பு விழா நடக்கும் இடத்தின் அருகேதான் ஜீவாவின் வீடு இருப்பதாக போகிற போக்கில் சொல்ல அதிர்ந்தார் காமராஜர். காரணம் அது ஒரு குடிசைப்பகுதி.

நிகழ்ச்சி முடிந்து ஜீவாவின் வீட்டுக்கு சென்ற காமராஜர், அவரது எளிமையான வீட்டைக் கண்டு இன்னும் அதிர்ந்துபோனார். அத்தனை சாதாரணமாக இருந்தது அந்த வீடு. அலுவலகம் திரும்பிய காமராஜர் உடனடியாக ஜீவாவிற்கு விடுதலைப் போராட்ட வீரர் ஒதுக்கீட்டில் அரசு வீட்டை ஒதுக்கும்படி உத்தரவிட்டார். ஆனால் ஜீவா அதை ஏற்க மறுத்தார்.

"என் வாழ்நாள் முழுவதும் இந்த பாட்டாளி மக்களுக்காக உழைத்தேன். என் இறுதிக்காலமும் அத்தகைய மனநிலையிலேயே கழிய வேண்டும். அவர்களிடமிருந்து என்னை தனித்துக்காட்டும் எந்த விஷயமும் எனக்கு தேவையில்லை" என மறுத்தார் நேர்மையாளர் ஜீவா.

இத்தனை மக்கள் ஆதரவுடனும் பெரும்தலைவர்களுக்குப் பிடித்தமானவராக இருந்தாலும், தூய்மையான தலைவனாக எளிமையாகவும் இறுதிவரை நேர்மையாக தன் பொதுவாழ்வினை அமைத்துக்கொண்டார் தோழர் ஜீவா.

உடல்நலம் குன்றிய நிலையில் கடந்த 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18- ம் நாள் இயற்கை எய்தினார் ஜீவா. ஜீவாவின் பொன்னுடலுக்கு கட்சி மாச்சர்யமின்றி தலைவர்களும், பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர். பின்னாளில் மத்திய அரசு அவர் தபால் தலையை வெளியிட்டு கவுரவம் செய்தது.

மதமும் மனித வாழ்வும், புதுமைப் பெண், மேடையில் ஜீவா, தேசத்தின் சொத்து, கலை இலக்கியத்தின் புதிய பார்வை ஆகியவை ஜீவா தொடர்பான நூல்கள்.

இவரது நினைவாக கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மணிமண்டபம் அமைத்து பெருமை சேர்த்துள்ளது தமிழக அரசு. புதுச்சேரியில் இவரது நினைவாக அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஜீவானந்தம் என பெயரிட்டது புதுவை அரசு. பாட்டாளிகளின் குரலாய் ஒலித்த தோழர் ஜீவாவின் வாழ்வு என்றும் மக்களிடையே சிறந்து விளங்கும்.

ஜீவாவின் மறைவு குறித்து கே.பி.ஜானகியம்மாள்.....

"ஜீவா அவர்கள் மறைவின்போது நானும் பொன்மலை பாப்பாவும் வேலூர் சிறையில் இருந்தோம். 19.01.1963 அன்று பிற்பகல் விடுதலை செய்யப்பட்டோம். வெளிவந்த பின்னர்தான் ஜீவாவின் மறைவுச் செய்தியைப்படித்தோம். செய்தி எங்களை திக் பிரம்மையடையச் செய்தது. கால்கள் ஒரு அடி எடுத்து வைக்க முடியவில்லை. கண்ணீர் விட்டோம். இறுதி யாத்திரைக்குச் சென்றுவிடலாம் என்று துடித்தோம். இரயில்வே ஸ்டேஷனுக்கும் பஸ் ஸ்டாண்டிற்கு அடைந் தோம். குறித்த நேரத்தில் போய்ச் சேரும்படியான போக்குவரத்துகிடைக்காத காரணத்தால் ஜீவா முகத்தைக் காணக் கிடைக்கவில்லை. சென்னைக்கும்செல்ல வழியில்லை. மதுரைக்கும் வர மனமில்லை.என்னைப் பொதுவாழ்வில் பங்கேற்க வைத்த தியாகச் சுடரை இறுதி முறையாகக் காணும் வாய்ப்புக்கூட கிடைக்கவில்லை. கண்கள் கலங்கினர். அவரது அரும்பெரும் சேவைகள் இதயத் திரையில் உருண்டோடி வந்தன. என்னைப் பொறுத்த வரையில் ஜீவா மறைந்தார் என்று எண்ண வில்லை. என்று எண்ணவும் மாட்டேன். அவர் என்றும் நமக்கு வழிகாட்டிக் கொண்டு தானிருக்கிறார்"

கே.பி. ஜானகி அம்மாவின் வார்த்தைகள் அனைவருக்கும்தானே...

*(ஜீவா பிறந்த நாள் ஆகஸ்ட் 21)*

- **பெரணமல்லூர் சேகரன்**

# காவல் துறையினரை கண்டித்து தேனியில் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள், சங்கத்தின் பெயரை தவறாக பயன்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தேனி நகர் காவல் ஆய்வாளரை 30.7.2021 அன்று சந்தித்து தேனி மேற்கு வட்டக் கிளை சார்பாக புகார் அளிக்கப்பட்டது. தொடர்ந்து 31.7.2021 அன்று காவல் நிலையத்தை முற்றுகையிட மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து கிளை நிர்வாகிகளும் திரளாக கலந்து கொண்டனர். பின்னர் காவல் ஆய்வாளர் புகார் மனு மீது நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். ஆனால் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் தோழர்கள் ஒன்று திரண்டு, சங்கத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள், சங்கத்தின் பெயரில் நடத்தும் மாநாடு நடைபெறும் அரங்கத்திற்கு சென்று முற்றுகையிடுவோம் என்று ஊழியர்கள் தெரிவித்தனர். தேனி பங்களா மேட்டில், நமது சங்கத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட ஜின்னா, ஞான திருப்பதி, உடையாளி, முருகன், பாலகிருஷ்ணன் விஸ்வநாதன் ஆகியோரைக் கண்டித்தும், நடவடிக்கை எடுக்க தயங்கும் தேனி நகர் காவல்துறையினரைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தேனி மேற்கு கிளை நிர்வாகிகள் தலைமையில், மாவட்ட நிர்வாகிகளான பொருளாளர் பேயத்தேவன், துணைத் தலைவர் தாஜுதீன், தமிழ் பரமன், அழகுராஜா, இணை செயலாளர் முத்தையா மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர் ரவிக்குமார், மகளிர் துணைத் குழு உறுப்பினர் ஜெயபாண்டி, அங்கன்வாடி ஊழியர் சங்க தலைவர் நாகலட்சுமி மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர் சங்க மாவட்ட தலைவர் துரைராஜ், பெரியகுளம், தேனி கிழக்கு, தேனி மேற்கு, ஆண்டிபட்டி, உத்தமபாளையம், போடி கிளை நிர்வாகிகள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

# சுதந்திர தினச் சூளுரை

ஒவ்வொரு ஆகஸ்ட் பதினைந்திலும்
ஒவ்வொருவருக்காகவுமே
ஓயாதுழைப்பதாய்
சாயாத பொய்யுரைக்கும்
சாமானியர்களின் எதிரிகளே..

புனித ஜார்ஜ் கோட்டை செங்கோட்டையென
புளுகு மூட்டைகளை
அவிழ்த்து விடும் பேரரச சிற்றரசர்களே..

வானத்தை வில்லாக வளைக்க வேண்டாம்
மணலைக் கயிறாகத் திரிக்க வேண்டாம்
நாங்கள் கட்டியிருக்கும் துணியை
உங்கள் கரங்கள்
உருவாமலிருந்தாலே போதுமானது

வாக்குறுதி மழையில் நனைந்து
ஈரம் காயாமல் ஐந்தாவதாண்டில்
எதை நோக்கினாலும்
கூரம்புகள் எமைநோக்கியே
குத்திக் கிழித்தது போதும்
எமதம்புகள்
உங்களது அரசு கட்டிலை
சுக்குநூறாக்கப் புறப்பட
சுதந்திர தின சபதமேற்றன

நகையணிந்த நங்கை
நள்ளிரவில் பயணம்
சேதாரமின்றி இயல்பாதல்
சுதந்திர சூட்சுமம்
தேசப்பிதாவின் கனவு கனவாகவே..

பெண்ணாகப் பிறந்ததே பாவம்
கண்ணாகக் கொண்ட உங்களின் ஆட்சியில்
பிரதிநிதிகளின் பாலியல் வன்மக் காட்சிகள்..இனி
நாள்தோறும் அரங்கேறா வண்ணம்
வாள்சுழற்றத் தயாராக..சுதந்திர
நாளின்று ஏற்கிறோம் சபதம்

எங்களுக்கான உணவை உடையை
எங்களுக்கான வாழ்க்கையை
எங்களுக்கான பண்பாட்டை
எங்களுக்கான கலாச்சாரத்தை
நாங்களே தீர்மானிப்போம்
உங்களின் தலையீட்டை..இனி
எங்களின் தலைகள்
உங்களோடு மோதித் தடுப்பதென
எங்களின் சுதந்திர தின
சபதமேற்றோம்

பெருநிறுவன தத்துப்பிள்ளைகளை
வளர்க்கவே
உங்கள் காலமெல்லாம்
காலாவதியானது
பொழுதலாம் எம்செல்வம்
கொள்ளை கொண்டு போனது
வெள்ளையர்களை மிஞ்சிய
கொள்ளையர்களின் உங்களால்
தொடர்வதற்கு முற்றுப்புள்ளி
படர்வதற்கேற்றோம் சபதமின்று

எங்களைக் கொன்று எருவாக்கி
உங்களின் ஒற்றைக் கலாச்சாரத்தை
விஷவிருட்சமாக்கிட...
நீங்களே காலாச்சாரக் காவலர்களாக..
இனியிங்கு அனுமதியில்லை
கனியெனும் வேற்றுமையில் ஒற்றுமை
நனிசிறக்கச் சபதமேற்றோம்

கருத்துரிமைக்கு
நீங்கள் வெட்டிய புதைகுழியில்
உங்கள் பாசிச ராட்சசத்தை
நாங்கள் புதைப்பதென
உங்களால் கொல்லப்பட்டோரின்
ரத்தத்திலகமிட்டு யுத்தமிட
சுதந்திர தின உறுதியேற்றோம்

வரலாற்றுச் சக்கரத்தை
நீங்கள் பின்னோக்கி நகர்த்த..இனி
நாங்கள் தடம் தாரோம்
அஞ்ஞானத்துக்குக் கல்லறை கட்ட
விஞ்ஞான விரும்பிகள்
மெய்ஞானமுடன் சூளுரைத்தோம்

இனியொரு விதிசெய்வோம்
அதை எந்த நாளும் காப்போம்
தனியொரு சாமானியர் சுதந்திரம்
இனியெவராலும் பறிக்கும் தந்திரம்
நனிபெரும் ஒற்றுமை முறிக்கும் மந்திரம்
கனியெனக் காக்கும் சாமானியரின் சுதந்திரம்

- **பெரணமல்லூர் சேகரன்**

# 15.07.2021 தேசிய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம்

இந்திய மக்கள் அனைவருக்கும் இலவச தடுப்பூசியை உறுதிப்படுத்த வேண்டும், புதிய பென்சன் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் , பறிக்கப்பட்ட அகவிலைப்படி சரண் விடுப்பு போன்ற உரிமைகளை உடனடியாக வழங்க வேண்டும், அரசுத்துறை மற்றும் பொதுத் துறையில் உள்ள அனைத்து காலி பணியிடங்களும் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நிரப்பிட வேண்டும், கொரோனோவில் இறந்த ஊழியரின் குடும்பத்துக்கு 50லட்சம் இழப்பீடு மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும், சேவைத் துறைகளை பலப்படுத்த வேண்டும் அனைத்து தற்காலிக ஒப்பந்த தினக்கூலி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி 15.07.2021 அன்று அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில முடிவின்படி தேசிய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம் வடசென்னை, தென்சென்னை மாவட்டங்கள் சார்பாக டி.எம்.எஸ். வளாகத்தில் நடைபெற்றது.

## சென்னை

ஆர்ப்பாட்டத்திற்கு தென்சென்னை மாவட்ட தலைவர் சா.டானியல் ஜெயசிங் தலைமை தாங்கினார். வடசென்னை மாவட்ட செயலாளர் அந்தோணிசாமி கோரிக்கை விளக்கவுரையாற்றி னார். மாநில செயலாளர் ஆர்.என்.நம்பிராஜன் சிறப்புரையாற்றினார். டி.எம்.எஸ் பகுதிக் குழுத் தலைவர் மணிமாலா நன்றி கூறினார்.

## நாகப்பட்டினம்

மாவட்ட மையம் சார்பில் தேசிய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம் இன்று ( 15.07.21 ) மதியம் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றி னார். நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் சிறப்புரையாற்றினார். நாகை வட்டச் செயலாளர் மு.தமிழ்வாணன் நன்றி கூறினார்.

இதில் 30 பெண்கள் உட்பட நூறுக்கும் மேற்பட்ட அனைத்து துறை அரசுஊழியர்களும் முகக் கவசம் அணிந்து சமூக இடைவெளியை பின்பற்றி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## தருமபுரி

தேசிய எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் கோ.பழனியம்மாள், மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

## திருவாரூர்

மாவட்ட மையத்தின் சார்பில் மாவட்ட தலைவர் எம்.ராஜமாணிக்கம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வெ.சோமசுந்தரம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் பி.மகாலிங்கம், கி.லதா, ட்டி.தமிழ்சுடர், எஸ்.மகேஷ், .பி.பரமேஸ்வரி, மாவட்ட செயலாளர், வி.சிவக்குமார், .வி.சின்னையன், பி.விஜயன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். த.நா.அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் எம்.சௌந்தரராஜன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் செ.பிரகாஷ் நன்றி கூறினார்.

## திருச்சி

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணை தலைவர் வி.ஜீவானந்தம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பழனிசாமி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். கோரிக்கையை ஆதரித்து துறைவாரி சங்க நிர்வாகிகள் முனைவர் கா.பால்பாண்டி, கே.எம். ராஜேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் ஏ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் ஆர். சுந்தர்ராஜ் நன்றி கூறினார். இதில் 18 பெண் உட்பட 30 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.

## நாமக்கல்

மாவட்ட மையத்தின் சார்பாக நாமக்கல் பூங்கா சாலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் கு.இராஜேந்திர பிரசாத் தலைமையேற்றார். கோரிக்கைகளை விளக்கி மாவட்ட செயலாளர் இரா.முருகேசன் பேசினார். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் கலைச்செல்வன் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக மாவட்ட துணைத் தலைவர் இளவேந்தன் அவர்கள் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர்

ஆட்சியர் அலுவலக முன்பாக மாவட்ட தலைவர் சந்திரசேகர் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது. கோரிக்கைகளை விளக்கி இரா.பாண்டுரங்கன் மற்றும் முண்ணனி ஊழியர்கள் பேசினர். வட்டகிளை தலைவர் கந்தசாமி நன்றி கூறினார். ஆர்பாட்டத்தில் ஆண்கள் 30 பெண்கள் உட்பட 40 ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

## காஞ்சிபுரம்

மாவட்ட மையம் சார்பில் தேசிய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. மாவட்டத் துணை தலைவர் ஜி.ரமேஷ் தலைமை வகித்தார். மாவட்டத் துணை தலைவர் ஜெயகுமார் அனைவரையும் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் துரை.மருதன் விளக்கவுரையாற்றினார். அனைத்து துறை ஒய்வூதியர் சங்கத்தின் தென்னரசு சிறப்புரையாற்றினார். மாநில செயற்க்குழு உறுப்பினர் ரஞ்சிட்சிங் நன்றி கூறினார். 15 பெண்கள் உட்பட 36 ஊழியர் முகக் கவசம் அணிந்து சமூக இடைவெளியை பின்பற்றி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## கடலூர்

பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மாவட்ட தலைவர் டி.இரவிச்சந்திரன் தலைமையில் தேசிய அளவிலான எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் கோரிக்கை விளக்கவுரையாற்றியதும் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க மாவட்ட தலைவர் கு.கவியரசு, தேசிய நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்க மாநில துணை தலைவர் கே.இரவி மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட துணை தலைவர் எஸ்.கருணாகரன் ஆகியோர் பேசினர். தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் ஆர்ப்பாட்ட வாழ்த்துரை வழங்கினார். முடிவில் மாவட்ட இணை செயலாளர் இராம.வெங்கடாஜலபதி நன்றி கூறினார் ஆர்ப்பாட்டத்தில் 50க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்துக் கொண்டனர்.

## திருப்பூர்




மதியம் திருப்பூர் வடக்கு-திருப்பூர் தெற்கு இணைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பும் தாராபுரம், உடுமலைப்பேட்டை, பல்லடம், மடத்துக்குளம், ஊத்துக்குளி வட்டாச்சியர் அலுவலகங்கள் முன்பும் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் மாவட்ட, வட்டகிளை நிர்வாகிகள் மற்றும் துறைவாரி சங்க நிர்வாகிகள், முன்னணி ஊழியர் தோழர்கள் கலந்து கொண்டனர். 6 வட்டக் கிளையில் 29 பெண்கள் உள்ளிட்ட மொத்தம் 119 பேர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை

எஸ்.ஜபருல்லா தலைமையில் நடைபெற்றது. துரை.அரங்கசாமி, மலர்விழி, குணசேகரன். சுப்பையா, மணிவண்ணன், சங்கர்கணேஷ். அன்னபூரணம் மற்றும் தோழர்கள் வாழ்த்தி பேசினர். இரா.ரெங்கசாமி சிறப்புரையாற்றினார். அ.பழனிச்சாமி நன்றி கூறினார்.

## கள்ளக்குறிச்சி

வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட தலைவர் அனந்தகிருஷ்ணன் தலைமையில்

நடைபெற்றது. மாவட்ட இணைச்செயலாளர் சாமிதுரை வரவேற்று பேசினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் வேலு, காஞ்சனமேரி, ராஜாராமன், வீரபத்திரன், சாமிதுரை, சுதா, குமாரதேவன், லாரன்ஸ், பாலமுருகன், ராமஜெயம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாவட்ட பொருளாளர் ரவி நிறைவுரையாற்றி னார். இறுதியாக மாநில தணிக்கையாளரும், மாவட்டச் செயலாளருமான கே.மகாலிங்கம் நிறைவுரையாற்றினார். துணைத் தலைவர் சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

## கரூர்

மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாலை நேர ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணை தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் கே.சக்திவேல் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். கோரிக்கையை ஆதரித்து துறைவாரி சங்க நிர்வாகிகள் என்.வெங்கடாசலம் எல்.பாலசுப்பிரமணி, வீரக்குமார், ஆர்.சுரேஷ் குமார், தங்கப்பாண்டியன், திண்டுக்கல் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் வளாக தலைவர் லட்சுமணன், கரூர் வட்ட கிளை தலைவர் அறிவழகன், கிருஷ்ணராய புரம் வட்ட கிளை செயலாளர் பழனிச்சாமி ஆகியோர் உரையாற்றினார்கள். மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார். இதில் 8 பெண்கள் உட்பட 58 பேர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல்

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் முபாரக் அலி கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார். மாநில துணை தலைவர் மங்களபாண்டியன் சிறப்புரையாற்றினார் மாவட்ட துணை தலைவர் பிச்சைவேல் நன்றி கூறினார்.

## ஈரோடு

ஈரோடு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட இணைச் செயலாளர் தா.திருமுருகன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ச.விஜய மனோகரன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் குமரவேல், சத்துணவு ஊழியர் சங்கத்தின் ராஜன்,நம்பியூர் வட்டக்கிளை செயலாளர் கருப்புசாமி, தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் அண்ணாதுரை ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக மாநில துணைத் தலைவர் மு.சீனிவாசன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சுமதி நன்றி கூறினார்.

## கோவை

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளாகத்தில் மாலை நேர கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் பால்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் செந்தில் குமார் விளக்கவுரையாற்றினார். கோவை வடக்கு வட்ட தலைவர் ராமசாமி, கிணத்துக்கடவு வட்ட கிளை அய்யாசாமி, கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் சண்முகசுந்தரம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட பொருளாளர் நடராஜன் நன்றி கூறினார்.

## தஞ்சாவூர்

பனகல் கட்டிடம் முன்பு மாவட்டத் தலைவர் சா.கோதண்டபாணி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆ.ரெங்கசாமி விளக்கவுரை ஆற்றினார். முன்னாள் மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் கண்டன உரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் சிவ.இரவிச்சந்திரன் நன்றி கூறினார். இதில் 60 பேர் கலந்து கொண்டனர்.

## மதுரை

பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் ஜெ.மூர்த்தி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா விளக்கவுரையாற்றினார். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சீனுவாசன் வாழ்த்தி பேசினார். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் மு.ராம்தாஸ் நன்றி கூறினார்.

## கிருஷ்ணகிரி

வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மதியம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆர்.நடராஜன் தலைமையேற்றார். மாவட்டத் தலைவர் பி.சந்திரன் சிறப்புரை யாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.வெங்கடேசன் நன்றி கூறினார். இதில் 12 பெண்கள் உட்பட 55 ஊழியர்கள் பங்கேற்றனர். ■

# தோழர் என். சங்கரய்யா விடுத்துள்ள பத்திரிகைச் செய்தி

தமிழக அரசு புதிதாக அறிவித்துள்ள 'தகைசால் தமிழர்' விருதினை இந்தாண்டுக்கு எனக்கு வழங்குவதாக மாண்புமிகு தமிழக



முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். எனது சேவையை பாராட்டும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள இவ்விருதினை ஏற்றுக் கொள்வதோடு, எனக்கு இந்த விருதினை அளித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விருதிற்காக அளிக்கப்படும் ரூ. 10 லட்சம் தொகையினை கோவிட் 19 பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக அரசு திரட்டி வரும் முதலமைச்சரின் கோவிட் 19 பேரிடர் நிவாரண நிதிக்கு மகிழ்ச்சியோடு வழங்குகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவனாக இருந்த காலந்தொட்டு இன்று வரை தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கும், இந்தியநாட்டில் விடுதலைக்கும், உழைப்பாளி மக்கள் நலன் காத்திடவும் என்னால் முடிந்தளவு பணியாற்றியுள்ளேன். சுரண்டலற்ற பொதுவுடமை சமுதாயத்தை உருவாக்க நான் ஏற்றுக் கொண்ட மார்க்சிய கொள்கையின் அடிப்படையில் பயணம் செய்துள்ளேன். எனது இறுதி மூச்சு வரை இப்பணியை தொடர்ந்து நிறைவேற்றுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் என். சங்கரய்யா விடுத்துள்ள பத்திரிகை செய்தியில் தெரிவித்துள்ளார். ■

## மருத்துவ உதவி



சாலை விபத்தில் கால் எழும்பு முறிவு ஏற்பட்டு ஈரோட்டில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொண்ட ஈரோடு வட்டக்கிளை இணைச் செயலாளர் செந்தில்குமாருக்கு அறுவை சிகிச்சை அன்று 4 யூனிட் இரத்தம் ஈரோடு வட்டக் கிளையின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அவரது மருத்துவ செலவை ஈடுகட்டும் வகையில் ஒரு சிறு பங்களிப்பாக ஈரோடு வட்டக்கிளையின் சார்பாக தோழர்களிடம் நிதி திரட்டப்பட்டது. திரட்டப்பட்ட முதற்கட்ட நிதி ரூ.21500/-ஐ 11.07.2021 அன்று பெரியசேமூரில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சங்கத்தின் சார்பாக மாவட்ட நிர்வாகிகள் மாவட்டத் தலைவர் அ.ராக்கிமுத்து, மாவட்டச் செயலாளர் ச.விஜயமனோகரன் ஆகியோர் பங்கேற்றனர். ■

## தமிழ்நாடு நிலஅளவை அலுவலர் சங்கம் சார்பில் கொரோனா நிவாரண நிதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை 13.07.2021 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு சார்பில் அதன் தலைவர் ரெ.காயாம்பூ, பொதுச்செயலாளர் ஜெ.ராஜா மற்றும் ஏ.பேபி ஆகியோர் சந்தித்து கொரோனா நிவாரணப் பணிக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.21 இலட்சத்திற்கான காசோலை வழங்கினார்கள். ■

# மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து தமிழக முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதம்

பெறுநர்
***மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*** *அவர்கள்*
*தலைமைச் செயலகம்*
*சென்னை-600009*

*மாண்புமிகு ஐயா,*

*வணக்கம்.*

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு இன்று 25.7.2021 சென்னை மாநில மையத்தில் மாநிலத்தலைவர் தோழர்.மு.அன்பரசு தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் தோழர்.ஆ.செல்வம் மற்றும் மாநில நிர்வாகிகள் அனைவரும் பங்கு பெற்றார்கள். மாநிலம் முழுவதிலுமிருந்து மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

***தீர்மானம் - 1***

*கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை முன்வைத்து பலகட்ட போராட்டங்களை தொடர்ந்து நடத்தியும் சங்க நிர்வாகிகளை அழைத்துப்பேச மறுத்த முந்தைய அதிமுக அரசினை நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் "**பகைமுடிக்கும் பணிமுடித்து**" ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தி உள்ளோம். சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் அனைத்தும் கழக அரசு வந்தவுடன் நிறைவேற்றப்படும் என வாக்குறுதி அளித்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர்.மு.க.ஸ்டாலின் ஆவார்.*

*மேலும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கடந்த 27.01.2021 அன்று மாநிலம் தழுவிய அளவில் மதுரையில் நடைபெற்ற போராட்ட ஆயத்த மாநாட்டிலும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி மூலம் "கழக ஆட்சி வந்த உடன் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் முழுமையாக ஏற்கப்படும்" என்றும், புதிய ஓய்வூதிய திட்டத்தினை இரத்து செய்து பழைய பயனளிப்பு ஒய்வூதிய திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கடந்த அதிமுக ஆட்சியின் போது போராடிய அரசு ஊழியர்களின் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் கைவிடப்படும் 17டி குற்றக்குறிப்பாணைகள் ரத்து செய்யப்படும் என்றும் உறுதி அளித்தார்.*

*இதனை ஒட்டியே திமுக தேர்தல் அறிக்கையிலும் மேற்கண்ட உறுதிமொழிகளை உள்ளடக்கிய வாக்குறுதிகளோடு அரசு ஊழியர்களின் பணிதொடர்பான பிரச்சனைகளை தீர்த்துவைக்க மாநில நிர்வாகத்தீர்ப்பாயம் அமைக்கப்படும் என்றும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்படும் என்றும், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து காலமுறை ஊதியமும் குறைந்தபட்ச ஓய்வூதியமும் பணிக்கொடையும் வழங்கப்படும் என்றும், அரசு ஊழியர்களின் குடும்ப நல நிதி 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அரசு ஊழியர்களுக்கான புதிய காப்பீட்டு திட்டம் மேலும் பயனளிக்கும் வகையில் மாற்றியமைக்கப்படும் என்றும் வாக்குறுதிகளும் அளிக்கப்பட்டிருந்தது.*

*நாங்கள் எதிர்பார்த்தபடியே திமுக ஆட்சி அமைந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலனை இதுவரை செய்யப்படவில்லை என்ற நிலையில் கடந்த ஒரு வார காலமாக அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது மீண்டும் 58ஆக குறைக்கப்படும் என்ற அறிவிப்பு பத்திரிக்கைகளில் வெளிவந்து கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்துக்கொண்டும், போட்டி தேர்வுகளுக்கு தயாராக உள்ள நிலையில் இளைய தலைமுறையினருக்கு சாதகமான அறிவிப்பு என்பதால் சமூக அக்கறை கொண்டு எங்களது சங்கம் வரவேற்கிறது.*

கடந்த ஆட்சியின்போது அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 2020ஆம் ஆண்டு 58லிருந்து 59 ஆகவும் 2021ஆம் ஆண்டு 59லிருந்து 60ஆகவும் உயர்த்தி அரசாணைகள் வெளியிடப்பட்ட போது அதனை எங்கள் அமைப்பு சார்பில் கடுமையாக எதிர்த்து மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம்.

ஆனால், ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கான பணப்பலன்களை பத்திரங்களாக (Bond) வழங்க உள்ளதாகவும் பத்திரிக்கை செய்திகள் வந்து கொண்டுள்ளன. இதனை தமிழக அரசு மறுத்து இதுவரை செய்தி வெளியிடாதது ஓய்வுபெறும் நிலையில் உள்ள அரசு ஊழியர்களுக்கு மிகுந்த மன கலக்கத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தி உள்ளது. மேலும், ஓய்வு பெற்றபின் ஓய்வுகால வாழ்க்கையில் திட்டமிட்டுள்ள குழந்தைகளின் படிப்பு, திருமணம், கடன் நேர்செய்தல் போன்றவற்றை நிறைவேற்ற முடியாமல் பொருளாதார சிக்கலுக்கு தள்ளப்படுவார்கள் என்று அச்சமும் ஏற்படுகிறது.

எனவே, தமிழக அரசு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு பணப்பலன்களை பணமாக வழங்க உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் - 2**

25.7.2021 இன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழுவில் ''விடியல் வரும்'' என்ற கனவோடு காத்திருக்கும் அரசு ஊழியர்களின் பிரதான கோரிக்கைகளான ''புதிய ஓய்வூதிய திட்டத்தினை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து முறையான காலமுறை ஊதியம் வழங்குதல், சாலைப்பணியாளர்களின் 41 மாதகால பணிநீக்க காலத்தை பணிக்காலமாக வரன்முறைப்படுத்தி அதற்கான ஊதியம் வழங்குதல், ஓய்வுபெறும் வயதினை மீண்டும் 58ஆக மாற்றுதல், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு மீண்டும் வழங்குதல், குறைக்கப்பட்ட சேமநலநிதிக்கான வட்டி விகிதத்தை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்துதல், உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக தமிழக அரசு பரிசீலித்திட வேண்டும்.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசு அலுவலகங்களில் உள்ள காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடவும் கடந்த அதிமுக அரசால் பறிக்கப்பட்ட, முடக்கப்பட்ட எங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட மாண்புமிகு தமிழக முதலமைச்சரை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**(மு.அன்பரசு)** — மாநிலத் தலைவர்

**(ஆ.செல்வம்)** — பொதுச் செயலாளர்

## சந்திப்பும் முறையீடும்

நமது மாநில செயற்குழு முடிவின் படி, ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள், அரசு உத்தரவின்படி ரத்து செய்யப்பட்டிருந்தாலும், போலீஸாரால் புனையப்பட்ட வழக்குகள் ரத்து செய்யப்படாமல் உள்ளது. அதனால் அரசு ஊழியர், ஆசிரியர்கள் விருப்ப ஓய்வு, பதவி உயர்வு பெறுவதற்கு தடையாக உள்ளது. 5068 பேர் மீதான வழக்குகளை ரத்து செய்திட தமிழக காவல்துறை தலைவர் திரு. சைலேந்திர பாபு ஐபிஎஸ் அவர்களை மாநில நிர்வாகிகள், சந்தித்து முறையீடு செய்யப்பட்டது. உடனடியாக நடவடிக்கை . எடுக்கப்படும் என உறுதியளித்தார்

- தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
மாநில மையம்

# ஆர்.எம்.எஸ். 4ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்

### மாநில மையம்

தோழர் ஆர்.எம்.எஸ் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வாக தமிழ்நாடு அரசு ஊழியர் மாநிலத் தலைவர் தோழர் மு .அன்பரசு மாநில மையத்தில் தோழர் ஆர்.எம். எஸ் அவர்களின் படத் திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

### சென்னை

29.7.2021 அன்று தோழர் ஆர்.எம்.எஸ் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் அரசு ஊழியர் சங்க மாநில மைய அலுவலகமான எம்.ஆர். அப்பன் இல்லத்தில் வடசென்னை, தென்சென்னை மாவட்ட தோழர்கள் சார்பாக நடைபெற்றது. தென் சென்னை மாவட்ட தலைவர் சா.டேனியல் ஜெயசிங் தலைமை ஏற்க முன்னாள் மாநில நிர்வாகிகளான சீனிவாசன், தியாகராஜன், வெற்றிராஜன் மற்றும் நாகை மாவட்ட செயலாளர் அ.தி.அன்பழகன் வடசென்னை மாவட்ட செயலாளர் அந்தோணிசாமி, மாநில செயலாளர் இரா.ந.நம்பிராஜன் ஆகியோர் ஆர்.எம்.எஸ். அவர்களின்நினைவுகள் குறித்து உரையாற்றினார்கள். இக் கூட்டத்தில் மாவட்ட பகுதி குழு நிர்வாகிகள் 25 தோழர்கள் பங்கேற்றனர்.

### தஞ்சாவூர்

தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு தின கருத்தரங்கம் 29.07.2021 அன்று தஞ்சாவூர் மாவட்ட அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் (தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்) நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கு தஞ்சாவூர் வடக்கு வட்டத் தலைவர் வி.சுப்ரமணி தலைமை தாங்கினார். தஞ்சாவூர் வடக்கு வட்ட துணைத் தலைவர் பி.சதீஷ்குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் ஆ.ரெங்கசாமி, முன்னாள் மாநில செயலாளர் தோழர் பன்னீர்செல்வம் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றி னார்கள். தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தஞ்சாவூர் மாவட்ட பொறுப்பாளர் சிவகுரு "தோழர் ஆர்.எம்.எஸ். கனவு கண்ட இந்தியா" என்ற தலைப்பில் கருத்துரை யாற்றினார். வடக்கு வட்ட பொருளாளர் பலராமன் கருத்துரையாளருக்கு நினைவு பரிசு வழங்கினார். இறுதியாக தெற்கு வட்ட பொருளாளர் முருகன் நன்றி கூறினார். கருத்தரங்கில் மாவட்டத் தலைவர் கோதண்டபாணி, மாவட்ட பொருளாளர் பாஸ்கரன் உள்ளிட்ட மாவட்ட, வட்ட நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் 50 -க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

### ஈரோடு

தோழர் ஆர்எம்எஸ் நினைவேந்தல் நிகழ்வு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் கு.குமரேசன் (மாநில தலைவர் TNROA), மு.சீனிவாசன்

**இரத்த தானம் செய்வோம்! உயிர்களைக் காப்போம்!**

(மாநில துணைத்தலைவர் TNGEA), பழனிவேல் (மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கம்) மற்றும் TNGEA மாவட்ட நிர்வாகிகள் ஆர்.குமரவேல், ச.விஜயமனோகரன், டி.திருமுருகன், ஆர்.சுமதி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

### கரூர்

ஆர்எம்எஸ் என்று அனைத்து உழைப்பாளி மக்களாலும் அழைக்கப்படும் நம்முடைய ஆசான் தோழர் முத்து சுந்தரம் அவர்களின் நினைவு நாள் 29.07.2021. அவரது தொழிற்சங்க பாதையை மேலும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் 28.07.2021 கரூர் மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

### கடலூர்

கடலூர் மாவட்டம் சார்பாக சங்க அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் டி.இரவிச்சந்திரன் தலைமையில் முன்னாள் மாநில பொதுச் செயலாளர் தோழர் ஆர்.எம்.எஸ் அவர்களின் 4வது ஆண்டு நினைவு கருத்தரங்கம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் எஸ்.வெங்கடேசன், மாவட்ட இணைச் செயலாளர்கள் எஸ்.பாலகிருஷ்ணன், கே.இரவி, அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் என்.காசிநாதன், மாவட்ட பொருளாளர் சி.குழந்தைவேலு, மாவட்ட துணை தலைவர் எஸ்.கருணாகரன், தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்க மாவட்ட தலைவர் செல்வகுமார், தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்க மாவட்ட செயலாளர் மாவட்ட தலைவர் ரமேஷ், தமிழ்நாடு நகராட்சி ஊழியர் சங்க மாநில செயலாளர் கு.பொற்செழியன், தமிழ்நாடு பொது பணித் துறை கணக்கு மற்றும் ஆட்சி அலுவலர் சங்க மாவட்ட தலைவர் அருள், பொது சுகாதாரத் துறை சுகாதார ஆய்வாளர் சங்க வி.சிவப்பிரகாசம், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறைத் துறை சாலை பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் என்.இராமர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் என்.வேலு மற்றும் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுபாட்டு ஊழியர் சங்க மாநில நிர்வாகி உள்ளிட்ட தோழர்கள் நினைவு அஞ்சலி புகழாரம் செய்து உரை நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் பலரும் கலந்துக் கொண்டு சிறப்ப்பித்தினர்.

### கோவை

தோழர் ஆர்.எம்.எஸ். 4ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாமஸ்கிளப், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில்

மாவட்ட துணைத்தலைவர் சாமிநாதன், தலைமையேற்றார். மாவட்ட செயலாளர் செந்தில்குமார், கே.பழனிச்சாமி (முன்னால் மாநில தலைவர், த.நா.சத்துணவு ஊழியர்சங்கம்) சங்கத்தின் மாநில துணைத் தலைவர் மு.சீனிவாசன் ஆகியோர் நினைவஞ்சலி உரையாற்றினர். மாவட்ட பொருளாளர் நடராஜன் நன்றி கூறினார். ■

**கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க முகக்கவசம் அணிவோம்!**

# இமிடேஷன் இம்சைகள்

Imitate Somebody to copy the way a person speaks of behaves, in order to make people laugh.

- Oxford Dictionary

## பொறுப்பு துறப்பு

Imitation என்ற வார்த்தைக்கு பொருள் தேடியதின் விளைவே அன்றி இக்கட்டுரை வேறெது குறித்தும், யார் குறித்தும் அல்ல.

நாட்டு நடப்புகள் அல்லது சில நிகழ்வுகள் வித்தியாசமாக நடக்கும்போது சில வார்த்தைகள் நம்மோடு ஒட்டிக்கொள்ளும்.

கொஞ்ச நாளுக்கு முன்னாடி #Go Back Modi ஹேஷ்டாக் ஒட்டிக் கொண்டதைப் போல.

இப்ப இமிடேஷன் என்ற வார்த்தை அடிக்கடி ஏனோ சம்பந்தமில்லாமல் நினைவுக்கு வந்து தொலைக்கிறது. சரி அப்படி என்னதான் அதற்கு அர்த்தம் என்று அகராதியில் அலசியபோது கொஞ்சம் இம்சையாகத்தான் தெரிகிறது.

## அர்த்தம் நெ.1 - போலியான பொருள்

திருமணம் அல்லது சில ஆடம்பர நிகழ்வுகளுக்கு சிலர் போகும்போது தங்கள் அந்தஸ்தை காட்ட தங்க நகைகளுடன் கவரிங் நகைகளையும் அணிந்து செல்வர். பார்ப்பதற்கு தங்கம் போலவே இருக்கும். தங்க நகையைவிட டாலடிக்கும். ஆனால் மலிவு விலை பொருள். தொடர்ந்து அணிய முடியாது. சில நாள் கழித்து பல்லிளித்துவிடும். சரி அது அவரவர் விருப்பம் என்று விட்டுவிடலாம்தான். ஆனால் உண்மையிலேயே ஹால்மார்க் தங்க நகை அணிந்திருப்பவர்கள் கொஞ்சம் சங்கடப்பட வேண்டியதாகிவிடுகிறது.

## அர்த்தம் நெ.2 செராக்ஸ் காப்பி

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08ஆம் தேதி இந்திய பிரதமர் 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் இனி செல்லாது என்று பணமதிப்பிழப்பு அறிவிப்பை வெளியிட்டார். அதற்கு அவர் சொன்ன காரணங்களில், "போலி நோட்டுகளை ஒழிப்பதன் மூலம் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்படும்" என்பதும் ஒன்று. இது எந்த அளவிற்கு பலனளித்தது என்று தனியாக தாளித்துக் கொள்ளலாம். இதில் போலி நோட்டுகள் என்பது ரிசர்வ் வங்கி சட்டரீதியாக வெளியிட்ட மதிப்புமிக்க நோட்டுகளை சிலர் கள்ளத்தனமாக கவர் செராக்ஸ் எடுத்து சில நம்பகமான ஏஜெண்டுகளை நியமித்துக் கொண்டு அப்பாவி மக்களிடம் கொடுத்து ஏமாற்றி பிழைப்பு நடத்தும் முறையாகும். இது மாதிரி ஆளுங்க என்னிக்காவது சட்டத்துக்கிட்ட மாட்டி திருதிருன்னு முழிச்சிட்டு கூண்டுல ஏறி பேந்த பேந்த நிக்க வேண்டியதுதான்.

## அர்த்தம் நெ.3 சாயல்/பாவனை காட்டுதல்

சினிமா துறையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒருவர் முன்னணியில் நின்று ரசிகர்களின் மனங்களில் இடம் பிடித்துவிடுவர். அது அவர்களுடைய உழைப்பு, திறமை, அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் அந்த உயரத்தை அடைந்திருப்பர். நடிப்பில் எம்.கே.தியாகராஜ பாகவதர் தொடங்கி, எம்.ஜி.ஆர்., சிவாஜி, ரஜினி, கமல், அஜித், விஜய் என்றும், இசையில் கே.வி.மகாதேவன், எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான், அனிருத் என்றும் பட்டியல் நீளும். புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டுபோல சிலர் இவர்களைப் போலவே இமிடேட் செய்து பார்த்து பாவம் இருக்கும் இடம் தெரியாமல் காணாமல் போய்விட்டார்கள்.

இன்னும் இமிடேஷன் என்பதற்கு

கார்பன் காப்பி

நகல்

குளோன்

பிரதி

போலி

செயற்கை

நடித்தல்

பாசாங்கு

என்று அர்த்தப் பட்டியல் நீள்கிறது.

இது இன்று நேற்றல்ல கம்பன் காலம்தொட்டே வருகிறது போலும்.

கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம் - கைகேயி சூழ்ச்சிப் படலத்தில்

**‘நவ்வி வீழ்ந்தென, நாடக மயில் துயின்றென்ன,**
**கவ்வை கூர்தரச் சனகி ஆம் கடி கமழ் கமலத்து**
**அவ்வை நீங்கும்’ என்று அயோத்தி**
**வந்து அடைந்த அம் மடந்தை**
**தவ்வை ஆம் என கிடந்தனள் கேகயன் தனையை!**

கைகேயி தனது சுயநலத்தின் காரணமாக ராமனை காட்டுக்கு அனுப்பிவிட்டு தனது மகன் பரதனை நாடாளச் செய்ய வேண்டும் என்பதற்காக தசரதனிடம் கைகேயி என்று கதாபாத்திம் போலி நாடகமாடி

**‘ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என்**
**சேய் அரசு ஆள்வது; சீதை கேள்வன் ஒன்றாய்**
**போய் வனம் ஆள்வது’**

என்று வஞ்சகமாய் வரம் வாங்கியதாக கம்பன் கூறுகிறான்.

ஆனால் இதை பரதனோ, அயோத்தி மக்களோ விரும்பவில்லை, ஏற்கவில்லை என்பதும் அக்மார்க் உண்மை.

என்னதான் இமிடேட் செய்தாலும் போலி போலிதான்.

அசல்தான் வென்று காட்டும்!

- **ஆர்.நடராஜன்,**
கிருட்டினகிரி

# வருவாய் கிராம உதவியாளரை தாக்கியவர் மீது நடவடிக்கை எடுக்காத காவல்துறையை கண்டித்து தஞ்சாவூரில் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்ட பொருளாளரும், வருவாய் கிராம உதவியாளர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவருமான வருவாய் கிராம உதவியாளர் கருணாநிதி 12.07.2021 அன்று நெம்மேலி, திப்பியக்குடி என்ற கிராமத்தில் சாகுபடி பயிராய்வு பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கும்போது அதே கிராமத்தை சேர்ந்த மணி என்பவர் கருணாநிதியை அரசு பணியை செய்ய விடாமலும், தகாத வார்த்தைகளால் திட்டியும், தாக்கியும் உள்ளார். உடனடி அந்த பகுதி காவல் நிலையமான பாப்பாநாடு காவல் நிலையத்தில் முறையீடு செய்தும், ஒரத்தநாடு துணை கண்காணிப்பாளர் அவர்களிடமும், முறையீடு செய்தும் குற்றவாளியை கைது செய்யாமல், குற்றவாளியை காப்பாற்றும் பாப்பாடு காவல் துறையை கண்டித்து, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட மையத்தின் சார்பில் 23.07.2021 அன்று ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன மாவட்டத் தலைவர் சா.கோதண்டபாணி அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து மாவட்ட செயலாளர் கி.ரெங்கசாமி விளக்கி பேசினார். ஆர்பாட்டத்தில் வருவாய் கிராம உதவியாளர் சங்கத்தின் தங்கராஜ், வருவாய் கிராம நிர்வாக அலுவலர் முன்னேற்ற சங்க முன்னாள் மாவட்ட செயலாளர் கிருபாகரன், தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் இரவி, மாவட்ட துணைத் தலைவர் சிவ.இரவிச்சந்திரன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.


முன்னாள் மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் கு.பாஸ்கரன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் வருவாய் கிராம உதவியாளர்கள் பெருமளவு கலந்து கொண்டார்கள். ■

# வாயால் வடை சுடலாம் வாங்க!

மை டியர் காம்ரேட்ஸ்,




இந்த தலைப்பை பார்த்த உடனே உங்களுக்கு என்ன தோணுது. "பாக்கெட்ல பத்து ரூபாகூட பணமில்லை ஆனா அவன் பண்ற பந்தாவைப் பாருங்க... வாயிலயே வடை சுடறாம்பா.'' என்று நாம் சொல்வோமே சில நபர்கள் அவர்களைப் பற்றித்தானே சொல்ல வருகிறீர்கள் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஆனால் நாம் நினைக்கிற மாதிரி வாயில் வடை சுடுவது ஒன்றும் அவ்வளவு சாதாரண காரியம் இல்லை. அதற்கு ஒரு அறிவு தேவைப்படுகிறது. சமயோஜித அறிவு. எதிராளியின் கேள்விக்கு சரியான கவுண்டர் போட வேண்டும். உங்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு சரியான பதில் சாட்டுரைகளை நீங்கள் துல்லியமாக வைக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் வடையில் உள்ள பருப்பு வேகும். அப்படி பதில் சாட்டுரைகளை கொடுப்பதற்கு நீங்கள் தகவல்களை சேகரித்து வைத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவற்றை சரியான கேள்விக்கு சரியான இடத்தில் எடுத்து வைக்கவும் தெரிந்திருக்க வேண்டும். அதற்காக நீங்கள் தகவல்களை திரட்டிக் கொண்டே இருக்க வேண்டும். உங்களை கூர்தீட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.






இரு நாட்டு எல்லைப் பிரச்சினையில் எல்லையைப் பாதுகாக்கவும், பொதுமக்களை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்துக் கொண்டு பேரம் பேசும் தீவிரவாதிகளிடம் இருந்து பிணைக் கைதிகளை விடுவிக்கவும் சாதுர்யமான பேச்சுவார்த்தை நடத்தி தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்காமலும் தம்முடைய தரப்பு நியாயங்களை நிலைநிறுத்தவும் பேச்சுவார்த்தையில் நிபுணத்துவம் கொண்ட நபர்களை எல்லா நாடுகளும் கொண்டிருக்கின்றன. இந்திய சீன எல்லை பிரச்னையில் 13 முறை பேச்சு வார்த்தை நடத்தினார்கள். 13 முறை என்ன பேசியிருப்பார்கள். 13 முறை பேசுவதற்கு என்ன இருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள். அதன் பெயர்தான் பொறுமை, சகிப்புத் தன்மை, எதிர்தரப்பில் நியாயமற்ற தன்மை இருந்தும் அதை பக்குவமாக கையாளும் பாங்கு அதில்தான் நம் வலிமை உள்ளது. இந்த பேச்சுவார்த்தைக்குப் பின்னரே சீனப் படைகள் பின்வாங்கத் தொடங்கின. பாகிஸ்தான் எல்லையிலும் பலமுறை நடந்த எல்லை மீறல்கள் பேச்சுவார்த்தைகளால் சரிபடுத்தப்பட்டுள்ளன. ராஜ்ஜிய ரீதியிலான ஒப்பந்தங்கள் போடுவதற்கு முன்பு அதற்காக பேச்சுவார்த்தை செய்வதற்கென்றே பல நாடுகள் நிபுணர்களை வைத்திருக்கின்றன. நம்முடைய தொழிற்சங்கங்களிலும் தொழிலாளர்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் பேசி




சமரசமில்லாமல் தொழிலாளர்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுக்கும் தோழர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திலும் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த செல்லும் தலைவர்கள் பலகட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தி ஊழியர்களுக்கான உரிமைகளை பேசிப் பெற்றிருக்கிறார்கள். பேச்சுவார்த்தையில் தங்கள் தரப்பினை சிறப்பாக செய்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

ஒரு இன்ஜினியர். அவருக்கு எந்த தொழிற்சாலையிலும் வேலையில்லை. அதனால் டாக்டர் தொழில் செய்ய முடிவு செய்தார். தன் வீட்டின் முன்பு வாசலில் போர்டு ஒன்று எழுதி வைத்தார். “எந்த வியாதியாக இருந்தாலும் 500 ரூபாயில் குணப்படுத்தப்படும். உங்கள் வியாதி குணமாகவில்லை என்றால் 1000 ரூபாயாக திருப்பித் தரப்படும்.'' இதைப்பார்த்த ஒரு டாக்டருக்கு ஆச்சர்யமாயிருந்தது. டாக்டருக்கு படிச்ச நம்மலாலேயே கிளினிக் வைக்க முடியாத போது இந்த ஆளு எப்படி வச்சாரு எந்த சந்தேகம் வந்தது. அதுலயும் 500 ரூபாயில எல்லா வியாதியையும் தீர்த்துடறேன்னு போர்டு வச்சதோட இல்லாம நோய் தீரலேன்னா 1000 ரூபாயா திருப்பித்தர்றதா வேற சொல்றாரே? நாமளும் ஒரு டாக்டர்தானே அவன் வழியிலயே போயி அவனை நட்டமடைய வைக்கணும் முடிவு பண்ணி ஒரு பேஷண்டைப் போல அந்த கிளினிக்கிற்கு சென்று “டாக்டர் எனக்கு நாக்குல எந்த சுவையும்உணர முடியவில்லை'' என்றார். அதற்கு அந்த இன்ஜினிய டாக்டர்,"நர்ஸ் அந்த 3ம் நம்பர் பாட்டிலில் இருக்கற மருந்தை 3 சொட்டு இவர் வாயில விடுங்க என்றார். மருந்தை விட்டபிறகு “அய்யோ இது சாக்கடை தண்ணியாச்சே'' என்று வாயைத் துப்பினார். “கரெக்டா சொன்னீங்க இப்போ உங்க டேஸ்ட் பட்ஸ் நல்லா வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சி உங்களுக்கு எல்லா சுவையும் உணர முடியுது'' பீஸை எடுங்க என்று பணத்தை வாங்கிவிட்டார். இதை அவமானமாகக் கருதிய டாக்டர் எப்படியும் 1000 ரூபாய் வாங்கிவிட வேண்டும் என்ற நோக்கில் அடுத்த நாள் மீண்டும் அந்த கிளினிக்கிற்குச் சென்றார். "டாக்டர் எனக்கு ஞாபகமறதி அதிகமா இருக்கு குணப்படுத்துங்க'' என்றார். அந்த இன்ஜினிய டாக்டர்" "நர்ஸ் அந்த 3ம் நம்பர் பாட்டிலில் இருக்கற மருந்தை 3 சொட்டு இவ்ர வாயில விடுங்க.'' என்றார்." அய்யோ அந்த 3ம் நம்பர் பாட்டில் இருக்கறது சாக்கடைத் தண்ணியாச்சே.'' என்றார். "குட் இப்போ உங்களுக்கு மெமரி பவர் நல்லாயிடுச்சி எடுங்க 500 ரூபாய்'' என்றார். இந்தமுறையும் ஏமார்ந்து திரும்பினார் ஒரிஜினல் டாக்டர். கொஞ்சநாள் கழித்து எப்படியும் தான் இழந்த 1000 ரூபாயை திரும்பப் பெற்றுவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு தனக்கு கண்பார்வை சரியில்லை மருந்து கொடுங்க டாக்டர் என்று அந்த டூப்ளிகேட் டாக்டரிடம் கேட்டார். அதற்கு அந்த டாக்டர், "சாரிங்க இதுக்கு என்கிட்ட மருந்து இல்லை இந்தாங்க 1000 ரூபாய்னு, இரண்டு நோட்டுக்களை நீட்டினார். கண்களை மூடியவாறே அதைவாங்கிய ஒரிஜினல் டாக்டர், இது ரெண்டு 100 ரூபாய நோட்டுதானே என்றார். இல்லசார் இது ரெண்டு ஐநாறு ரூபா நோட்டுங்க சார் என்றார். உடனே கண்களை திறந்து ரூபாய்நோட்டுக்களை பார்த்துவிட்டு"ஏன் பொய் சொல்றீங்க?'' என்று டாக்டரைப் பார்த்து கோபமாகக் கேட்டார். அதற்கு அந்த இன்ஜினிய டாக்டர்"வெரிகுட். இப்போ உங்களுக்கு






பார்வையும் நல்லாயிடுச்சி. எடுங்க டாக்டர் பீஸ் 500 ரூபாய்.'' என்றவாறு நிஜ டாக்டரின் கையிலிருந்த இரண்டு 100 ரூபாய் நோட்டுக்களையும் பிடுங்கிக் கொண்டாராம். வாயிருந்தா எப்படி வேணா பொழச்சுக்கலாம்ங்கறதுக்கு இந்தக் கதை ஒரு நல்ல உதாரணம்.

எல்லா பேச்சுவார்த்தைகளும் ஒரே அமர்வில் முடிவுக்கு வந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது. அது பலமுறை நடக்கும். முதலாவது நடந்த பேச்சு வார்த்தைக்கும் பத்தாவது முறை நடந்த பேச்சு வார்த்தைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பார்க்க வேண்டும். பத்துமுறை பேசியாகிவிட்டது, இனிமேல் பேசுவதில் பலனில்லை என்று சோம்பிவிடக்கூடாது. 11வது முறை பேச்சுவார்த்தைக்காக அழைத்தாலும் முதல் முறை போனபோது காட்டிய உற்சாகத்துடனே செல்ல வேண்டும். ஒரு விஷயத்தில் பத்துமுறை பேச்சு வார்த்தை நடந்தும் முடிவு வரவில்லை என்றால் இரு தரப்பிலும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார்கள் என்று அர்த்தம். இருதரப்பில் ஏதேனும் ஒரு தரப்பு தங்கள் நிலைபாட்டை இருபதாவது முறை நடக்கும் பேச்சுவார்த்தையில் கூட தளர்த்திக் கொள்ள முன்வரலாம். அதனால் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை எப்போதும் திறந்தே வைத்திருக்க வேண்டும். இவையெல்லாம் சிறந்த மத்தியஸ்தர் ஆவதற்குத் தேவையான அடிப்படைக் கூறுகள் என்கிறார்கள் அறிஞர்கள்.

ஈசாப் என்றொரு நபர் இருந்தார். அவர் கதை சொல்வதில் கில்லாடி. அவர் குடும்பத்தில் வறுமை வாட்டிக்கொண்டிருந்தது. அதனால் அவர் தன் பெற்றோரிடம் தன்னை யாருக்காவது விற்றுவிடுமாறும் தன்னை வாங்கும் நபரிடம் நயமாகப் பேசி திரும்பி வந்துவிடுவதாக கூறினார். அந்தக்காலத்தில் கிரேக்க நாட்டில் அடிமைகளை பெரும்செல்வந்தர்கள் தங்கள் வீடு அல்லது வணிக வேலைகளுக்காக வாங்கிச் செல்லும் வழக்கம் இருந்தது. ஒரு செல்வந்தர் ஈசாப்போடு சேர்ந்து சில நபர்களை விலைக்கு வாங்கிக் கொண்டு தன்னுடைய பண்ணை வீட்டிற்கு அழைத்துக் போனார். எல்லா அடிமைகளும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு அடிமையையும் கூப்பிட்டு உனக்கு என்ன வேலை தெரியும் என்று கேட்டு கைவிலங்குகளை அவிழ்த்துவிட்டு அவர்களுக்கான வேலைகளை ஒதுக்கிக் கொண்டிருந்தார். ஈசாப்பின் முறை வந்தது."ஏய் ஈசாப், உனக்கு என்ன தெரியும்?'' என்று கேட்டபோது ஈசாப் சொன்னார், "எனக்கு கதை சொல்லத் தெரியும்,''

"ஓ...இப்போது அதுவும் ஒரு வேலையாக மாறி விட்டதா?'' என்றவர், சரி ஒரு கதை சொல்






கேட்போம்.'' என்றார்.

"ஒரு ஊரில் ஒரு ஓநாய் இருந்தது. மிகவும் சோர்ந்திருந்த அந்த ஓநாய் உண்ண ஏதேனும் கிடைக்குமா என்று அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தபோது ஒரு நாயைப் பார்த்தது. 'நீ மட்டும் எப்படி கொழு கொழு என்று இருக்கிறாய்? உனக்கு எங்கிருந்து உணவு கிடைக்கிறது' என்று ஏக்கத்தோடு கேட்டது ஓநாய். நாய் சொன்னது, 'அதோ அந்த வீட்டில் ஒரு மனிதர் இருக்கிறார், அவர் எனக்கு வேளா வேளைக்கு விதவிதமாக நிறைய சாப்பிடத் தருகிறார். நான் அவர் வீட்டில்தான் வளர்கிறேன். உன்னையும் அவரிடம் அழைத்துப் போகவா?' என்று கேட்டது.

ஓநாய் மகிழ்ச்சியோடு ஒத்துக்கொண்டது. அப்போதுதான் ஓநாய் கவனித்தது, நாயின் கழுத்தில் ஏதோ தொங்கிக் கொண்டிருந்தது. ஓநாய் தன் கழுத்தைப் பார்ப்பதை உணர்ந்த நாய், 'ஓ இதுவா நான் எங்கேயும் ஓடிவிடாமல் இருக்க ஒரு சின்ன வளையத்தை அந்த மனிதர் என் கழுத்தில் மாட்டி சங்கிலி போட்டிருக்கிறார். அந்த மடையருக்குத் தெரியவில்லை, நல்ல உணவு கிடைக்கும்போது யாராவது தப்பித்து ஓடுவார்களா என்ன?' என்றது. நாய் அப்படிச் சொன்னதும் ஓநாய் அதனுடன் நடப்பதை நிறுத்தியது. 'ஏன் நின்றுவிட்டாய். வா அந்த வீட்டில் எனக்காக வைத்திருக்கும் உணவை நான் உனக்குத் தருகிறேன். சுவையாக இருக்கும்.' என்றது நாய். அதற்கு ஓநாய் 'நீ போ நான் வரவில்லை. எனக்கு உணவு தேவைதான். ஆனால் அது ஒன்று மட்டுமே என் தேவை அல்ல' என்று சொல்லிவிட்டு திரும்பி தன் வழியே நடந்தது.' என்று சொல்லி கதையை நிறுத்தினார் ஈசாப்.

சில நொடிகள் அமைதியாக இருந்த செல்வந்தர், "அவ்வளவுதானா?'' என்றார். "ஆமாம்'' என்றார் ஈசாப். கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு செல்வந்தர் கேட்டார், "இந்தக் கதை சொல்ல வருவது என்ன?'' அதற்கு ஈசாப்"ஒன்றுமில்லை, இது ஒரு கதை அவ்வளவுதான்'' என்றார். செல்வந்தர் சில நிமிடங்கள் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு "சரி வேறு ஒரு கதை சொல். கேட்போம்'' என்றார்.

ஈசாப் உற்சாகமாக அடுத்த கதை சொல்ல ஆரம்பித்தார், "ஒரு ஊரில் ஒரு ஓநாய். அந்த ஓநாய் என்னவோ தன் பாட்டுக்கு அமைதியாகப் போய்க்கொண்டிருக்கும் என்றாலும் அது கடந்துபோகும் ஒவ்வொரு முறையும் ஒரு சிறுவன் பாறையின் மீது நின்றுகொண்டு அதன் மீது ஒரு சிறு கல் எறிந்து அதை வம்பிழுப்பது வழக்கம். கல்லடி படாமல் இருக்க அந்த இடத்தில் இருந்து ஓநாய் கொஞ்சம் வேகமாக ஓடும். ஒருநாள் அந்த சிறுவன் ஓநாய் ஓடுவதைப்பார்த்து 'நான் எவ்வளவு பலசாலியாக இருந்தால் இந்த ஓநாய் என்னைப் பார்த்து பயப்படும்? ஏய் உலகமே நான் தான் உன் எஜமானன்' என்று கொக்கரித்துச் சிரித்தான். ஓடிய ஓநாய் கொஞ்சம் நின்று அந்தச் சிறுவனைப் பார்த்து 'முட்டாளே, பலசாலி நீ அல்ல. நீ ஏறி நின்று கொண்டிருக்கும் அந்தப் பாறைதான் உன் பலம். உன்னுடைய உண்மையான பலத்தை சோதிக்க விரும்பினல் அந்தப் பாறையில் இருந்து கீழே இறங்கி என் பக்கம் வா' என்றது ஓநாய்.'



அதன்பிறகு அந்தச் சிறுவன் வாயைத் திறந்திருப்பான் என்றா நினைக்கிறீர்கள்?'' என்று செல்வந்தரைப் பார்த்து கேட்டார் ஈசாப்.

கதை கேட்டுக்கொண்டிருந்த செல்வந்தரின் முகத்தில் சிறு புன்னகை. அவர் ஈசாப்பைப் பார்த்து சொன்னார்,"ஈசாப், இந்தக் கதைமூலமாக நீ ஏதோ சொல்ல வருகிறாய்தானே?'' என்றார்.

"அய்யா, எந்தக் கதை மூலமாகவும் நான் எதையும் சொல்வதில்லை. அதை கேட்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான செய்தியை அதிலிருந்து பெறுகிறார்கள். அதுதான் கதையின் மாயம்.'' என்றார். மேலும் சில கதைகளைக் ஈசாப்பிடம் கேட்ட பின்னர் செல்வந்தருக்கு ஒரு சந்தேகம் வந்தது, "ஈசாப், உன் கதைகளில் ஏன் விலங்குகள் அதிகம் வருகின்றன?''

ஈசாப் சொன்னார் "எனக்கு மனிதர்களைக் கண்டு பயம். விலங்குகள் பொய் பேசுவதில்லை. சூழ்ச்சிகள் செய்வதில்லை. பிற உயிர்களை இழிவாக நடத்துவதில்லை. மனிதர்கள் எண்ணற்ற தவறுகள் செய்கிறார்கள் என்பது மட்டுமல்ல அய்யா, அதை சுட்டிக்காட்டினால் கோபமும் கொள்கிறார்கள். கதைகளை நம்பும் எனக்கோ உண்மையை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. ஒருமுறை நரி பாலைவனத்தில் நடை போட்டுக்கொண்டிருந்தபோது தன்னுடைய நிழலைப் பார்த்து, 'அடடா நான் தான் உலகில் உயரமானவன்' என்று செருக்கு கொண்டது. வெளிச்சம் மறைந்த பின்னர் நிழலும் மறைந்து விட்டது. நிழல் மறைந்து விட்டதைப் பார்த்து நரி வருந்தியது. இப்படி ஒரு கதை சொன்னால் ஆர்வத்தோடு கேட்கிறார்கள். அதுவே 'உங்கள் கர்வத்தை விட்டுவிட்டு கொஞ்சம் பணிவோடு நீங்கள் நடந்து கொள்ளலாமே' என்று மனிதர்களைப் பார்த்து சொன்னால் மனிதர்கள் யாராவது கேட்பார்களா? அதனால்தான் மனிதர்களின் கதைகளை விலங்குகள் மீது போட்டு கதைகள் சொல்கிறேன்.'' என்றார்.

மறுநாள் காலையில் செல்வந்தர் ஈசாப்பின் கைகளிலிருந்த விலங்குகளை அவிழ்த்து விடச் சொன்னார்,"ஈசாப், நான் என் பாறையிலிருந்து இறங்கிவிட்டேன். ஒருபோதும் அதில் ஏற மாட்டேன். இனி நீ சுதந்திர மனிதன். நீ போகலாம்.'' என்றார். ஒரு சில கதைகள் சொன்னதற்காகவா ஈசாப்பை அந்த செல்வந்தர் விடுவித்துவிட்டார் என்று நினைக்கிறீர்கள். இல்லை. ஈசாப் சொன்ன கதைகளைவிட செல்வந்தர் கேட்ட கேள்விகளுக்கு ஈசாப் சொன்ன பதில்கள் முக்கியமானவை. ஈசாப் சொன்ன பதில்கள் அவர் சொன்ன கதைகளுக்கான நீதியை உயரப்படுத்தின. அவைதான் செல்வந்தரின் மனதில் மாற்றங்களை விதைத்திருக்கின்றன. 'ஈசாப் நீதிக்கதைகள்' உணர்த்தும் உண்மையும் இதுவே.

இன்றைய நாளில் ஊடகங்களில் நாம் காணும் விவாத மேடை நிகழ்ச்சிகள், பட்டி மன்றம், மேடைப்பேச்சு, கதா காலட்சேபம் எல்லாவற்றிற்கும் ஈசாப் கதைகள்தான் முன்னோடி. நீதியும் நிதர்சனமும் உள்ள பேச்சுக்கள் மக்களைக் கவருகின்றன. வெற்றி பெற்ற மனிதர்கள் வாய்ச் சொல்லில் வீரர்களாக மட்டுமல்ல செயலிலும் செம்மையாக கடமையாற்றிருக்கிறார்கள். இதை வாழ்ந்து சென்ற அறிஞர்கள் உணர்த்தியிருக்கிறார்கள். அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள், முன்னணித் தோழர்கள், இயக்கத்தின் முன்கள செயல்பாட்டாளர்கள் அனைவரும் இன்றைய தேதி வரையிலான நாட்டு நடப்பு மற்றும் இயக்க நடவடிக்கைகளை தெரிந்து வைத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவற்றை தர்க்க ரீதியாக அரசு ஊழியர்களிடம் கொண்டு சேர்ப்பதன் மூலம் இயக்கத்தை கட்டுக் கோப்பாக வைத்திருப்பது மட்டுமல்ல உரிமைகளையும் விட்டுக்கொடுக்காமல் போராடலாம். நிச்சயம் வெற்றி காணலாம். அதனால் தோழர்களே, வாயால் வடை சுடலாம் வாங்க, நேர்மை செழிப்போடு.

- ***ஜிஜி***

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com